★ REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

2023 ஜூலை 25 செவ்வாய்க்கிழமை

THINAKARAN

தினகரன்

வரு. 91 இல. 174 | Tuesday 25, July, 2023 | 12பக்கங்கள் | 50/-







### பெருந்தோட்டம், விவசாயத்துறை சார்ந்த சகல நிறுவனங்களையும் ஒன்றிணைத்து

# விவசாய பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ நடவடிக்கை



### பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பெருந்தோட்ட கைத்தொழில் துறை மற்றும் விவசாயத் துறை சார்ந்த அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து ஆராய்ச்சி பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பதிரண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், அது தொடர்பானஆரம்ப கட்டப் பணிகள் இந்த ஆண்டு நிறைவடையும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் விளக்கமளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் ரமேஷ் பத்திரண, கடந்த காலங்களில் விவசாயத்துறை போன்றே பெருந்தோட்டக் கைத்தொழில் துறையிலும் உரப்பற்றாக்குறை பாரிய பிரச்சினையாக காணப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்தவுடன் உரப் பிரச்சினைக்கு முன்னுரிமை வழங்கி அதனைத் தீர்ப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தார். அதனைத் தொடர்ந்து,

04

## சீன கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஜனாதிபதியுடன் சந்தித்துரையாடல்



சவால்களுக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அர்ப்பணிப்பை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தூதுக்குழுவினர் பாராட்டியுள்ளனர். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு மற்றும் அரசியல் குழுவின் உறுப்பினரும், ஷொங் கிங் நகரசபை

04

## இந்திய கடன் உதவித்திட்டத்திற்கு முன்னரே 80 வீத மருந்துகள் இறக்குமதி

### இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டதாக அமைச்சர் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்திய கடனுதவித் திட்டத்திற்கு முன்பதாகவே நாட்டுக்கு இறக்குமதி செய்யும் மருந்துப்பொருட்களில் 80%மானவை இந்தியாவிலிருந்தே கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் அதிகாரிகள் சுகாதார அமைச்சின் ஆலோசனை தெரிவுக்குழுவில் தெரிவித்துள்ளனர். சுகாதார அமைச்சின் ஆலோசனைத் தெரிவுக்குழு அமைச்சர்

04

## IMF இன் கடன் மீளாய்வு திட்டம்; வெற்றிகரமாக முகங்கொடுக்கலாம்

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மீளாய்வு வேலைத்திட்டத்திற்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க முடியும் என அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அதுதொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிக்கையில், சர்வதேச நாணய

04

## 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதே ஜனாதிபதியின் எண்ணம்

### அதிகாரங்களை வழங்குவதிலும் அக்கறை – அரவிந்தகுமார்



13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக அமுல்படுத்தி மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும் என தற்போதைய ஜனாதிபதி மிக அக்கறையுடன் செயல்பட்டு வருகின்றார் என கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

மேற்படி சட்டத்தை முற்றாக அமுல்படுத்தி மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும் என்பதில் தற்போதைய ஜனாதிபதி மிக அக்கறையுடன் செயல்பட்டு வருகின்றார். மட்டக்களப்பு வாகரை கதிரவெளி விக்னேஸ்வரா

04

### எம்.பி மாருக்கென அரசினால் ஒதுக்கப்பட்டுள்ள

## மாதிவெல வீட்டுத்தொகுதியில் 42 வெளியாரது ஆக்கிரமிப்பில்

### உண்மை நிலையை கண்டறியுமாறு சபாநாயகர் பணிப்பு




பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக மாதிவெலவில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத் தொகுதியில் நாற்பத்திரண்டு வீடுகள் வெளியாட்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. இந்த நிலைமை எம்.பி.க்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளதால், அந்த வீடுகளில் வசிப்பவர்கள் குறித்து

04

## ரயில்வே தொழிற்சங்க போராட்டம் முடிவுக்கு

### நேற்று மாலை முதல் ரயில் சேவைகள் வழமைக்கு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ரயில்வே தொழிற்சங்கத்தினர் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று பிற்பகல் கைவிடப்பட்டுள்ளது. ரயில்வே தொழிற்சங்கத்தினருக்கும் ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ.

04

## சர்வகட்சி மாநாட்டை SJB, தே.ம.ச பகிஷ்கரிப்பு

### இரு கட்சிகளும் தீர்மானம் எடுத்துள்ளதாக அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**





அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் தெளிவுபடுத்துவதற்காக அழைக்கப்பட்டுள்ள சர்வ கட்சி மாநாட்டை பகிஷ்கரிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி

04

## கடந்த வருடத்தில் 463 யானைகள் இறப்பு

### வரலாற்றில் அதிக இறப்பாக பதிவு



2022 ஆம் ஆண்டில் 463 யானைகள் உயிரிழந்துள்ளதாக இலங்கை சுற்றாடல் மற்றும் இயற்கை ஆய்வுகளுக்கான நிலையம் உறுதிப்படுத்தியுள்ளது. கடந்த பத்தாண்டுகளில் உயிரிழந்த யானைகளில் கடந்தாண்டே பெருமளவான யானைகள்

04

### தேசிய மக்கள் சக்தி, பெப்ரல் அமைப்பு தொடர்ந்த

## தேர்தல் தொடர்பான வழக்கு 26ஆம் திகதி வரை ஒத்திவைப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



குறித்த தினத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமை தொடர்பில் தேசிய மக்கள் சக்தி மற்றும் பெப்ரல் அமைப்பு ஆகியன தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையை நாளை 26ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக

04

## கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் மூடப்படுகிறது

### ஆகஸ்ட் 01 முதல் புதுடில்லியிலிருந்தே சேவை




இலங்கைக்கான நோர்வே தூதரகம் இம்மாதம் 31 ஆம் திகதியுடன் இலங்கையில் செயற்பாடுகளை முடித்துக்கொள்வதாக அறிவித்துள்ளது.

ஆகஸ்ட் 01 முதல் இலங்கை மற்றும் மாலைதீவுடனான நோர்வேயின் இருதரப்பு உறவுகளுக்கு புதுடில்லியில்

04

## இறக்குமதியாகும் முட்டை இனி ரூ. 35க்கு விற்பனை

### அரசு திட்டம் என்கிறார் அமைச்சர் நளின்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




இறக்குமதி செய்யப்பட்டுள்ள முட்டைகளில் தினமும் ஒரு இலட்சம் முட்டைகளை சந்தைக்கு விநியோகிப்பதற்கு தீர்மானித்துள்ளதோடு அதனை ரூ. 35க்கு விற்பனை செய்யப்படும்

04

## எரிபொருளுக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம்

### அடுத்த வாரம் முதல் அமுலுக்கு வரும் – டி.வி.சானக



அடுத்த மாதத்தில் இருந்து எரிபொருட்களுக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக தெரிவித்துள்ளார். அதற்கமைய, நிறுவனங்கள் தமது தீர்மானத்திற்கமைய அதிகபட்ச சில்லறை விலைக்கு உட்பட்டு எரிபொருளை விற்பனை செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

04



## கடலில் நீராடச்சென்ற 03 இளைஞர்கள் மரணம்

நீர்கொழும்பு கடலில் பரிதாப சம்பவம்

03



### உள்ளூராட்சி சபைகளில் தற்காலிகமாகவுள்ள

## 12,000 ஊழியர்கள் நிரந்தர நியமனம் பெறுகின்றனர்

03



## இலங்கை இந்திய பயணிகள் கப்பல் சேவை தாமதமாகும்

மேலும் 06 மாதங்கள் செல்லுமென அறிவிப்பு

03

### 40 உலக தலைவர்களது பெயர்களை கூறி

## 03 வயது இலங்கை சிறுமி உலக சாதனை



நுவரெலியா கொட்டகலையைச் சேர்ந்த பவிஷ்ணா என்ற சிறுமி உலக சாதனை புத்தகத்தில் (international book of world record) இடம்பிடித்துள்ளார். குறித்த பிரதேசத்தை

04

## வட கடலில் பெருந்தொகை கேரள கஞ்சா கைப்பற்றல்

### 54 மில். ரூபா பெறுமதியென கணிப்பு; ஒருவர் கைது




வடக்கு கடற்பரப்பில் 54 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் வெத்திலைக்கேணி வத்திராயன் கடற்பகுதியில்

04

### வவுனியா கொலைச் சம்பவம்;

## பிரதான சந்தேக நபர் பொலிஸாரிடம் சிக்கினார்



வவுனியாவில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் சனிக்கிழமை (22) மாலை கைது செய்யப்பட்டதாக வவுனியா, நெடுங்கேணி பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த படுகொலை சம்பவம்

04

### முறையான ஒழுங்குபடுத்தல் இல்லை;

## பச்சை குத்தும் போது நோய்கள் பரவ வாய்ப்பு

### அரசை சாடும் பச்சை குத்தும் சங்கம்



பச்சை குத்தும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தாததாலும், பல நிறுவனங்கள் உரிய

04

### 07 ஆம் மாடியிலிருந்து தவறி வீழ்ந்து

## பொருளாதார நிபுணர் சந்தரத்ன உயிரிழப்பு



கொழும்பு ரொஸ்மீட் பிளேஸில் உள்ள அடுக்குமாடி கட்டிடத்தின் 7வது மாடியில் இருந்து விழுந்து பொருளாதார நிபுணர் அமல் எரான் ஹேரத் சந்தரத்ன உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

04

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்










தினகரன் பத்திரிகையின் 91 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி, பொறியியலாளர் மர்ஹூம் மொஹமட் ஹாஷிம் மொஹமட் ரஸ்மி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக நடைபெற்ற 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் பேருவளை பர்பரீன் வெற்றி பெற்றது. மாளிகஹேன மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி பர்பரீனை எதிர்த்து தர்கா நகர் வை.எம்.எஸ்.சீ விளையாட்டுக் கழகம் போட்டியில் பங்கேற்றது. போட்டியின் முடிவில் பர்பரீன் 2 : 1 என்ற கோல் அடிப்படையில் போட்டியில் வெற்றி பெற்று பொறியியலாளர் மர்ஹூம் மொஹமட் ஹஷிம் மொஹமட் ரஸ்மி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தர்கா நகர் ரூமி ஹாஷிம் பவுண்டேஷனின் தலைவர் கலாநிதி ரூமி ஹாஷிம்,கௌரவ அதிதியாக முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல்,பாடசாலை அதிபர் எஸ். ஆர். குமார், பேருவளை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் பதியுதீன், தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்க தலைவர் ஏ. பீ. எம். ஸுஹைர், பேருவளை உதைபந்தாட்ட சங்க தலைவர் ரிஸ்வான் மற்றும் பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

(படங்கள்: பீ. எம். முக்தார்)








# வெள்ளவத்தை மஸ்ஜித் மக்பூலில் முஹர்ரம் புத்தாண்டு நிகழ்வு



**ருஸைக் பாரூக்**

முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த இஸ்லாமிய புத்தாண்டு (முஹர்ரம்) வைபவம் கொழும்பு வெள்ளவத்தை மஸ்ஜித் அல் மக்பூலில் (மேமன் ஹனபி மஸ்ஜித்) முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பைசல் ஆப்தீன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

மஸ்ஜித் அல் மக்பூல் டிரஸ்டி ஹாபிஸ் இஹ்சான் இக்பால் காதிரி இஸ்லாமிய புத்தாண்டு முஹர்ரம் சிறப்புகள் குறித்து ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் உரையாற்றினர். ஹாபிஸ் தமீம் பட்டேல் மற்றும் ஹாபிஸ் புர்கான் மயாரி ஆகியோர் கஸீதா பாடினர்.

ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஏ.எம். இல்யாஸ் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிற்கு நினைவுச் சின்னமொன்றை இதன்போது வழங்கி வைத்தார்.

புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, வக்ப் சபையின் தலைவர் மொஹிதீன் ஹுசைன், ஹஜ் குழுவின் தலைவர் இப்ராஹிம் அன்சார், கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால், உலமாக்கள் மற்றும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.



மருதானை கிளிப்டன் பாலிகா பெண்கள் பாடசாலைக்கு AMYS நிறுவனத்தினால் ஒரு தொகை கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. AMYS நிறுவனத்தின் பணிப்பாளர் மௌலவி தாஸிம் அவற்றை பாடசாலை அதிபர் திருமதி விநோதனியிடம் கையளிப்பதையும் அருகில் மகபோதி சங்க உறுப்பினர் சுரங்கனி ,பொலிஸ் அதிகாரி நுவன் ஆகியோர் இருப்பதையும் படத்தில் காணலாம்.

# ஆசிரியர் கல்வியியலாளர் சேவை 111 ஆட்சேர்ப்பு; நேர்முகப் பரீட்சை

## இன்று முதல் 27 வரை கல்வியமைச்சில்

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் மூன்றுக்கு ஆட்சேர்ப்புக்கான பொது நேர்முகப் பரீட்சை இன்று (25) முதல் 27 ஆம் திகதிவரை மூன்று தினங்கள் கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளது.

மேற்படி மூன்றாம் தரத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கான போட்டிப்பரீட்சை 2019 (2020) பிரகாரம் குறிப்பிட்ட பதவிகளுக்கான அடிப்படைத் தகைமைகளைப் பரிசோதிக்கும் பொது நேர்முகப் பரீட்சையே இன்று ஆரம்பமாகின்றது. இந்த நேர்முகப் பரீட்சை பத்தரமுல்ல இசுருபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகத் தேர்வின்போது, கோரப்பட்ட ஆவணங்களும் சான்றிதழ்களும் சரிபார்க்கப்பட்டு ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகுதிகளை நிறைவு செய்ததாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் திறன் மதிப்பீட்டு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பில் 07.02.2020 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் மற்றும் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தின்படி அடிப்படைத் தகைமைகள் முறையாக நிரூபிக்கப்படல் வேண்டும். இதற்காக பின்னர் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படமாட்டாது எனவும் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் 06.08.2019 ஆந் திகதிக்கு 706 பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாக குறிப்பிட்ட வர்த்தமானியின் பிரகாரம் தெரிய வருகின்றது.

# மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் மூவர் பலி; அகுரஸ்ஸவில் சம்பவம்

**வெலிகம தினகரன் நிருபர**

அகுரஸ்ஸ அமலகொட பிரதேசத்தில் மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் மூவர் பலியானதுடன் மற்றும் இருவர் காயமடைந்ததாக அகுரஸ்ஸ பொலிஸார் (22) தெரிவித்தனர். அகுரஸ்ஸ அமலகொட பகுதியில் அமைந்துள்ள வாகனம் திருத்தும் வேலைத் தளத்துக்கு அருகாமையில் இருந்த மரமொன்று கடும் காற்றின் காரணமாக முறிந்து வீழ்ந்துள்ளது. இதன் போது அவ்விடத்தில் இருந்த ஐவர் அதற்குள் சிக்குண்டுள்ளனர். இவர்களுள் ஒருவர் அவ்விடத்திலேயே உயிரிழந்ததுடன் மற்றையவர் அகுரஸ்ஸ வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் உயிரிழந்துள்ளார். மூன்றாமவர் காலி கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுமதித்த பின்னர் அங்கு உயிரிழந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். உயிரிழந்த மூவரும் 65, 49, 28 வயது மதிக்கதக்க அகுரஸ்ஸ மற்றும் மாத்தறை நுபே பகுதிகளைச் சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக அகுரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




சீனன்கோட்டை கிரிக்கட் லீக் "SEASON 01" ஒழுங்கு செய்த மாபெரும் கிரிக்கட் சுற்றுப்போட்டி நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் சனி, ஞாயிறு தினங்களில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இப்போட்டியின் இறுதிச்சுற்றில் வெற்றி பெற்ற சுபர் கிங் அணிக்கு விழாவின் பிரதம அதிதியாக கலந்து கொண்ட Beauty Gems ஸ்தாபகரும் மாணிக்க வர்த்தகருமான அஹ்ஸர் ஸவாஹிர் சாம்பியன் கிண்ணத்தை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

# அம்பலாந்தோட்டை துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

அம்பலாந்தோட்டை கொக்கல்லை வடக்கு கடவர பிரதேசத்தில் நபரொருவர் துப்பாக்கியால் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக அம்பலாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

வடக்கு கடவர பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஏ.கே. சிரிபால எனும் 61 வயது இரண்டு குழந்தைகளின் தந்தையொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது வீட்டிற்கு நள்ளிரவில் வருகைதந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டில் உள்ளோரை அழைத்தபோது வீட்டுஉரிமையாளர் கதவைத் திறந்துள்ளனர். இதன்போது இனந்தெரியாத நபர் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டதில் வீட்டு உரிமையாளர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஜுலை 25 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்



தொழுகை நேரம்
சுபஹ் - 04.42
லுஹர் - 12.18
அஸர் - 03.42
மஃரிப் - 06.31
இஷா - 07.46

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆடி 09
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

13ஆவது அரசியலமைப்பிலான திருத்தத்திற்கு அப்பாலான விடயங்களுக்கு

# அனைவரும் இணங்கினால் நடவடிக்கைக்கு ஜனாதிபதி தயார்

## அனைத்து மக்களையும் சமமாக நடத்தும் கட்சி ஐக்கிய தேசிய கட்சியே

ஜனாதிபதி தனது இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய போது 13வது அரசியலமைப்பிலான திருத்தத்திற்கு அப்பாலான விடயங்களுக்கு அனைவரும் இணங்கினால், அதற்கான ஏற்பாடுகளை செய்வோம் என்று தெரிவித்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பேருவளை ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் ரொஹான் பெட்ரிக் ஏற்பாடு செய்திருந்த தொகுதிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



கடந்த வாரம் நாங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தோம். அப்போது வடக்கிலிருந்து எமக்கு பயனுள்ள பதில் கிடைத்தது. தென்னிலங்கை இளைஞர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் வடக்கிலுள்ள இளைஞர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே காலியில் நிர்மாணிக்கப்படவிருந்த வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரமாண்ட கட்டிடத்தை யாழ்ப்பாணத்திற்கு அன்பளிப்பு செய்தோம். அதுதான் உண்மையான நல்லிணக்கம்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் அவர்கள் முன்நிற்கின்றனர் என்றும் அமைச்சர் கூறினார். இந்த நாட்டை ஒரே நாடாக நினைக்கும், பிளவுபடாத, பிரித்து ஆள நினைக்காத ஒரு தலைவருடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறார்கள்.

இன, மத ரீதியாக சிந்திக்காத ஒரு தலைவருடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறார்கள். தேசிய ரீதியில் சிந்திக்காது, குறுகிய நோக்குடன் சிந்திக்காத ஒரு தலைவருடன் இணைந்து செயற்படுவதற்கு வடக்கு மக்கள் ஒன்றிணைந்துள்ளனர்.

04

# அனைத்துக் கட்சிகளும் உள்வரும் வகையில் ஐ.தே.கவின் புதிய யாப்பு தயாரிக்கப்படும்

## கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி. தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



அனைத்துக் கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் வருவதற்கு வசதியான வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய யாப்பை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அந்தக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் கட்சியின் மாநாட்டை நடத்தி புதிய மாற்றங்களை மேற்கொள்ளுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நவீன உலகத்திற்கு பொருத்தமான வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பினை மாற்றுவதே கட்சியின் எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். எவருக்காவது நாடு வீழ்ச்சியுறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானால் அவர்கள் முதலில் ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்ச்சியுறச் செய்யவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ச்சியுற்றதால் முழு நாடும் வீழ்ச்சியுற்றது.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரே நாட்டுமக்களுக்காக துணிச்சலுடன் முன்வந்து மீண்டும் நாட்டை கட்டியெழுப்பினார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும்போதே கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# 16 வயதுடைய மூன்று சிறுமிகள் தப்பியோட்டம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கம்பஹா பிரதேசத்தில் இயங்கிவரும் சிறுவர் பராமரிப்பு நிலையத்திலிருந்து 16 வயதுக்கு மேற்பட்ட 03 சிறுமிகள் இரகசியமாக தப்பிச் சென்றுள்ளதாக கம்பஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சிறுவர் பராமரிப்பு நிலையத்தை முன்னெடுத்துவரும் பெண் கம்பஹா பொலிஸில் அது தொடர்பில் முறைப்பாடு மேற்கொண்டுள்ளதையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


மேற்படி சிறுவர் பராமரிப்பு நிலையத்திலிருந்து தப்பிச் சென்றுள்ள சிறுமிகள் தொடர்பில் தகவல்கள் ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கும்

04

உள்ளூராட்சி சபைகளில் தற்காலிகமாகவுள்ள

# 12,000 ஊழியர்கள் நிரந்தர நியமனம் பெறுகின்றனர்

## அமைச்சரவை அனுமதி வழங்கியது



உள்ளூராட்சி மன்றங்களில் தற்போது தற்காலிக மாற்று மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தரவுகள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் நியமனங்கள் வழங்கப்படும் எனவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் தற்போது 12,000 பணியாளர்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அமைச்சரவையின் அங்கீகாரத்தை அடுத்து தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படவுள்ளதாக ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

தற்போது உள்ளூராட்சி அமைப்புகளில் தற்காலிக பணியாளர்கள், மாற்று பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் என சுமார் 10,000 பேர் பணியாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7 மாத காலத்திற்குள்

# ஏழு இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் வருகை

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜனவரி மாதம் முதல் ஜுலை 20 ஆம் திகதி வரை நாட்டுக்கு 7 இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகைதந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்தவகையில் இந்த வருடத்தின் இம் மாதம் 20 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 7,14,598 உல்லாசப் பிரயாணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளதாகவும் அந்தவகையில் இந்த மாதத்தின் கடந்த 20 தினங்களுக்குள் மாத்திரம் 89,724 உல்லாசப் பிரயாணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளதாகவும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் ஜுலை மாதத்தின் 47,293 சுற்றுலாபயணிகளே நாட்டிற்கு வருகைதந்துள்ள நிலையில் இந்த வருடத்தின் ஜுலை மாதத்தின் அதில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்படுவதாகவும் அந்த அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் 7,19,978 சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகைதந்துள்ளனர். எனினும் இந்த வருடத்தின் ஜுலை மாதம் 20 ஆம் திகதி வரை 7 இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகைதந்துள்ளமை பெரும் முன்னேற்றமாகும் என்றும் அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்தவகையில் அதிகளவு சுற்றலா பயணிகள் இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளதுடன் ஐக்கிய இராச்சியம், சீனா ஆகிய நாடுகளிலிருந்தும் பெருமளவு சுற்றுலா பயணிகள் வருகைதந்துள்ளதாக அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் நேற்றுவரையான காலப்பகுதியில் மத்தள விமான நிலையத்திற்கு 34,164 ரஷ்ய உல்லாசப் பிரயாணிகள் வருகைதந்துள்ளதுடன் இந்தியாவின் எம்பிரேஸ் ஒப் கொடேலியா என்ற பிரயாணிகள் கப்பல் கடந்த ஜூன் மாதத்தில் ஐந்து தடவைகள் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகைதந்துள்ளதுடன் அதன்மூலம் 2,618 சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகைதந்துள்ளதாகவும் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# ஜயந்த கெடகொட MP சமர்ப்பித்த சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரண்

## சட்ட மாஅதிபர் நீதிமன்றத்திற்கு அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெடகொடவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாநகர சபை மற்றும் உள்ளூராட்சி சபைகள் திருத்த சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானதென சட்டமா அதிபர் உச்ச நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

அதற்கிணங்க, மேற்படி சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டுமானால் பாராளுமன்றத்தில் 2/3 விசேட பெரும்பான்மை

04

# கிழக்கு ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்

## ஆளுநர் செந்தில் கல்வியமைச்சர் சுசிலுடன் சந்திப்பு



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும் இடையில் நேற்று (24) கலந்துரையாடல் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் கடந்த சில மாதங்களாக செந்தில் தொண்டமானால் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

அதன் அடிப்படையில் சுசில் பிரேமஜயந்த, கிழக்கு மாகாணத்தில் கல்வித் தரத்தை மேம்படுத்த உதவும் பாடம் சார்ந்த 700 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு தேவையான அனுமதிகளை ஆளுநருக்கு வழங்கியுள்ளார்.

மேலும் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, தெரிவு செய்யப்படாத உயர் தேசிய ஆங்கில டிப்ளோமாதாரிகளின் நியமனம் தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

# கடலில் நீராடச்சென்ற 03 இளைஞர்கள் மரணம்

## நீர்கொழும்பு கடலில் பரிதாப சம்பவம்



நீர்கொழும்பு கடலில் நீராடிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உட்பட மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சுன்னாகத்தைச் சேர்ந்த ஜெயதீஸ்வரன் ஜெயலக்ஸ்மன் (வயது 23), கொஸ்லந்தையைச் சேர்ந்த சத்தியமூர்த்தி சிறிவிந்த் (வயது 21), டயகமவைச் சேர்ந்த வடிவேல் ஆனந்தகுமார் (வயது 23) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் (23) இடம்பெற்றுள்ளதாகவும், கடலில் நீராடிய நிலையில் காணாமல் போயுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களுடன் நீராடச் சென்ற மற்றோர் இளைஞர் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தேடுதலில் உயிரிழந்த நிலையில் மூவரின் சடலங்களும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை- இந்திய பயணிகள் கப்பல் சேவை தாமதமாகும்

## மேலும் 06 மாதங்கள் செல்லுமென அறிவிப்பு

இந்தியாவின் நாகப்பட்டினத்திற்கும் இலங்கையின் காங்கேசன் துறைக்கும் இடையிலான பயணிகள் படகுச் சேவையை ஆரம்பிக்க இன்னும் 6 மாதங்கள் செல்லுமென இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நாகப்பட்டினத்தில் பயணிகள் முனையம் அமைப்பதற்கான பூர்வாங்க பணிகள் தொடங்கியுள்ளதாகவும், பணிகள் முடிவடைய இன்னும் 4 முதல் 5 மாதங்கள் ஆகும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அக்டோபர் மூன்றாவது வாரத்தில் தொடங்கும் வடகிழக்கு பருவமழையின் நிலையைப் பொறுத்து கால அளவு மாறலாம் என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வீடு கட்டித் தருவதாக ஏமாற்றி 3 கோடிக்கு மேல் நிதி மோசடி

## பொலிஸாரினால் ஒருவர் கைது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மேற்படி சந்தேக நபர் தொடர்பில் நுகேகொட விசேட பொலிஸ் பிரிவு மற்றும் மாலபே பொலிஸ் நிலையத்திலும் 26 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், மிரிஹான குற்றத்தடுப்புப் பிரிவு மேற்கொண்ட விசாரணையை அடுத்து மேற்படி நபரை கைது

04

பகிரங்க ஏலவிற்பனை

ஓரியண்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2023/07/31 திகதிக்கு காலாவதியாகி இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2023/08/16 மற்றும் 2023/08/17 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஓரியண்ட் பினான்ஸ் பீஎல்சீ,
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.07.23
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5184
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,383,376.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 9 6 5 7 0 8

ராசி ஜய மலன்
சீட்டிழுப்பு இலக்கம் 493
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,678,722.20
வெற்றி இலக்கங்கள் 11 15 25 38

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1214
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 101,192,624.80
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 51 65 68 70
விசேட எழுத்து G

சீட்டிழுப்பு இலக்கம் 0010
வெற்றி இலக்கங்கள் 7 9 3 8 9 0
0 1
ரூ. 10,053,286.00

சீட்டிழுப்பு இலக்கம் 3426
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,129,996.80
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 09 14 33 38

Mega Power
1532 09302
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 402,101,512.00
A 25 01 56 60 64
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 201.42 | 214.02 |
| கனடியன் டொலர் | 226.74 | 240.83 |
| யூரோ | 331.60 | 350.03 |
| ஜப்பான் யென் | 2.1241 | 2.2376 |
| சிங்கப்பூர் டொலர் | 224.04 | 237.14 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 388.30 | 408.92 |
| சுவிஸ் பிராங்க் | 338.21 | 360.12 |
| அமெரிக்க டொலர் | 304.02 | 318.23 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 826.29 | கட்டார் ரியால் | 85.48 |
| குவைத் டினார் | 1015.01 | சவூதி ரியால் | 83.03 |
| ஓமான் ரியால் | 809.14 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 84.81 |

# சர்ச்சைக்குரிய கடம்ப மரங்கள் கம்பஹாவிலும் கண்டுபிடிப்பு

## கலாநிதி அச்சலா அத்தநாயக்க தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

க்றூடியா செலனிகா என்ற விஞ்ஞானப் பெயரில் அறிமுகப்படுத்தப்படும் 7 கடம்ப மரங்கள் கம்பஹா மாவட்டத்தை அண்டியுள்ள பகுதிகளில் இனங்காணப்பட்டுள்ளதாக பேராதனை ரோயல் பூங்காவின் பிரதி பணிப்பாளர் கலாநிதி அச்சலா அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பெம்முள்ள, மகலாகொட, ரந்தாவான கண்டி மகர, தொரணகொட, பியகம, கதிரான மற்றும் மல்வானை பகுதிகளில் இந்த கடம்ப மரம் இனங்காணப்பட்டுள்ளதாகவும் சில நபர்கள் வழங்கிய தகவல்களுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசீலனைக்கு இணங்க மேற்படி மரங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மூலிகை மரத்தின் பெயர் பனுகரந்த என அழைக்கப்பட்ட போதும் தற்போது அது பண்டுகரந்த என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மரங்கள் அனைத்தும் 2019 முதல் 2021 ஆரம்ப ஆறு மாத காலத்திற்குள் இனங்காணப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும் இதுபோன்ற வகை மரங்களின் சிறு கன்றுகள் பூங்கா திணைக்கள அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## விவசாய..

முக்கியமாக இந்நாட்டு தேயிலை உற்பத்திக்கு பாரிய சிக்கலை ஏற்படுத்திய உரப் பிரச்சினை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. உரம் இறக்குமதி செய்ய விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதன் காரணமாக கடந்த காலங்களில் அதிகரித்திருந்த உர விலை தற்போது குறைந்து வருகின்றது.

மேலும் தேயிலை உற்பத்தியை பொருத்தவரை, கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது இந்த வருடம் அதன் உற்பத்தி அதிகரித்துள்ளது.

அதேவேளை, எமது தேயிலைக்கான சர்வதேச சந்தை வாய்ப்புகள் குறைந்துள்ளன.குறிப்பாக உக்ரைன் – ரஷ்ய யுத்தம் மற்றும் எமது நாட்டுத் தேயிலையை அதிகம் கொள்வனவு செய்யும் நாடுகளான ஈரான், ஈராக், லிபியா, மற்றும் சிரியா போன்ற நாடுகளில் நிலவும் உள்நாட்டு யுத்தம் காரணமாகவும் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஒரு தீர்வாக நாம் மசகு எண்ணெய் இறக்குமதிக்காக ஈரானுக்கு வழங்க வேண்டிய சுமார் 500 மில்லியன் டொலர்களுக்குப் பதிலாக தேயிலையை அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய இணக்கப்பாட்டை நாம் கடந்த வருடம் மேற்கொண்டோம்.

அதன்படி எதிர்காலத்தில் மசகு எண்ணைக்குப் பதிலாக தேயிலை என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் அந்நாட்டுக்கு நாம் செலுத்த வேண்டியுள்ள நிதிக்கு ஈடான பெறுமதியுள்ள தேயிலையை படிப்படியாக ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதன் மூலம் தடைப்பட்டிருந்த ஈரான் நாட்டின் சந்தை வாய்ப்பை மீண்டும் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## IMF இன் கடன்....

நிதியத்தின் கடன் மீளாய்வு வேலைத்திட்டத்திற்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க முடியுமென்றும் அதற்கிணங்க, அந்த நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவுசெய்யும் வகையில் பாராளுமன்ற நடவடிக்கைகள் மூலம் 80% மான நிபந்தனைகள் தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பந்தயம் மற்றும் சூதாட்ட வரிகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான கட்டளைகளை எதிர்வரும் மாதத்தின் முதல் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள அமைச்சர், அது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதற்கிணங்க எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி அல்லது 9 ஆம் திகதி மேற்படி கட்டளைச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அவர் எவ்வாறெனினும் திருத்தப்பட்ட பந்தயம் மற்றும் சூதாட்ட வரி கடந்த ஏப்ரல் மாதம் முதல் அமுலுக்கு வந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## இறக்குமதியாகும்...

என வர்த்தக, உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அத்துடன் இந்த வாரம் முழுவதும் ச.தொ.ச நிறுவனங்கள் ஊடாக 35 ரூபாவுக்கு பாவனையாளர்களுக்கு முட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை உணவகங்களுக்கு மாத்திரம் மொத்த விலையில் விற்பனை செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் சந்தையில் நிலவும் முட்டை விலை அதிகரிப்பு மற்றும் முட்டைக்கான தட்டுப்பாட்டை கருத்திற்கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை சந்தைக்கு விற்பனைக்கு விடவும் 35 ரூபா வுக்கு நுகர்வோருக்கு முட்டையை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## பச்சை குத்தும்...

பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றாததாலும் நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இது எயிட்ஸ் உள்ளிட்ட சமூக நோய்கள் மற்றும் பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக இலங்கை பச்சை குத்தும் சங்கம் தெரிவித்துள்ளது.நாட்டில் கிட்டத்தட்ட ஐயாயிரம் பச்சை குத்தும் நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் 140 மட்டுமே சங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை பச்சை குத்தும் சங்கம் கூறுகிறது.அனைத்து பச்சை குத்தும் நிறுவனங்களுக்கும் அறுவை சிகிச்சை அறையின் வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் பச்சை குத்துவதற்குப் பயன்படுத்தப்படும் பணியிடத்தை கிருமி நீக்கம் செய்து கருவிகளை கிருமி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் சங்கம் சுட்டிக்காட்டுகிறது. பச்சை குத்துவதற்கு பயன்படுத்தப்படும் ஊசிகளை ஒரு முறை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் சில நிறுவனங்கள் அவற்றை பல முறை பயன்படுத்துவதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.இதன் காரணமாக சமூக நோய்கள் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு பயன்படுத்தப்படும் ஊசி வகைகளை அழிக்கும் முறை இல்லை எனவும் அவற்றை முறையாக அப்புறப்படுத்தாவிட்டாலும் அவை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பச்சை குத்தும் ஸ்தாபனமொன்றை நடத்துவதற்கான வர்த்தகப் பதிவுச் சான்றிதழைக் கூட பெற்றுக்கொள்ளும் வசதி இந்த நாட்டில் இல்லை என சங்கத்தின் ஸ்தாபகர் சஜித் டி சில்வா சுட்டிக்காட்டுகிறார்.

## சர்வகட்சி....

மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் தீர்மானித்துள்ளன. இதனை கட்சிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த மாநாடு நாளை 26 ஆம் திகதி பி.ப 5.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களின் தலைவர்களுக்கும் ஜனாதிபதி செயலகத்தின் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டையே ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் பகிஷ்கரிக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் அரசியல் தலைவர்களை சந்தித்தபோது நாட்டின் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் தெளிவுபடுத்தியதுடன் அந்த பிரச்சினையை அடுத்த பரம்பரைக்கு விட்டுச்செல்லாமல் அதற்குத் தீர்வு காண்பதே தமது நோக்கமென குறிப்பிட்டிருந்தார்.

அரசியல் ரீதியாக அன்றி அது தமது கொள்கையென்றும் ஜனாதிபதி அதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களின் இணக்கப்பாடு கிடைத்தால் 13வது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த தாம் தயாரென்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பின்னணியில் தேசிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு எதிரானவர்களா என்ற கேள்வியே எழுகிறது. அவர்கள் வடக்கு கிழக்கு ஜனநாயக ரீதியான அரசியல் கட்சிகளின் தலைவர்களின் வேண்டுகோளுக்கு செவிமடுக்க தயாரில்லையா என்ற கேள்வியும் எழுகிறது. அதேவேளை, தேசிய பிரச்சினைக்கு தீர்வுகண்டு தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு எப்போதாவது அந்தக் கட்சி அதிகாரத்திற்கு வரும்வரை எதிர்பார்த்துள்ளதா என்ற கேள்வியும் எழுகிறது.

## கடந்த வருடத்தில்....

உயிரிழந்துள்ளதாக மையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளரான கலாநிதி ரவீந்திர காரியவசம் தெரிவித்துள்ளார். இந்த சம்பவங்களில் பெரும்பாலானவை மனித ஈடுபாட்டினால் ஏற்படுவதாகவும் ரவீந்திர காரியவசம் தெரிவித்தார்.

யானைகளின் எண்ணிக்கையை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், அது சுற்றுலாத்துறைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த நிலை தொடருமானால், இலங்கையில் காட்டு யானையைக் கண்டறிவது அரிதான நிகழ்வாகிவிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ரயில்வே தொழிற்சங்க...

டி. எஸ். குணசிங்கவுக்குமிடையில் இடம்பெற்றுள்ள பேச்சுவார்த்தையையடுத்து மேற்படி வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

புதிய ரயில் சேவைகள் சிலவற்றை ஆரம்பிப்பது தொடர்பில் ரயில்வே நிர்வாகம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிராகவும் அத்துடன் மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து ரயில்வே தொழிற்சங்கத்தினர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக நேற்றுக் காலை 11 அலுவலக ரயில் சேவைகளும் அத்துடன் நேற்று மதியம் 20 ரயில் சேவைகளையும் ரத்துச் செய்ய நேர்ந்ததாக ரயில்வே நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## 03 வயது இலங்கை ...

சேர்ந்த செந்தில்குமார் ரேவதி தம்பதிகளின் புதல்வியே இந்த சாதனையை படைத்துள்ளார்.

தனது மூன்று வயதில், உலக நாடுகளின் 40 தலைவர்களின் புகைப் படங்களை பார்த்து அவர்களின் பெயர்களை ஒரு நிமிடத்தில் மிக வேகமாகக் கூறி உலக சாதனை படைத்துள்ளார். உலக சாதனை புத்தக நிறுவனமானது இச்சிறுமியின் திறமையையும், அதீத நினைவாற்றலையும் பரிசீலனை செய்து உலக சாதனை புத்தகத்தில் பதிவு செய்து சாதனைச் சிறுமியாக தமது இணைய தளத்தில் வெளியிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் இதற்காக விண்ணப்பித்து ஏப்ரல் மாதம் சாதனை படைத்த சிறுமியாக அறிவித்து இவருக்கான இலச்சினை, பதக்கம், மற்றும் சான்றிதழ் என்பவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## கொழும்பிலுள்ள....

உள்ள நோர்வே தூதரகம் பொறுப்பேற்கும் என தூதரகம் தனது பேஸ்புக் பக்கத்தில் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள நோர்வே தூதரகம் என்ற தனது முகநூல் பக்கத்தை மூடுவதாக தெரிவித்துள்ள தூதரகம், புதுடெல்லியில் உள்ள நோர்வே தூதரகத்தின் பக்கத்தைப் பின்தொடருமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தியா, இலங்கை மற்றும் மாலைத்தீவுடனான அதன் தற்போதைய ஒத்துழைப்பு குறித்த மேலதிக புதுப்பிப்புகள் புதிய பேஸ்புக் பக்கத்தில் கிடைக்கும் என தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தனது @NorwayAmbLK எனும் ட்விட்டர் கணக்கு புதுப்பிக்கப்படமாட்டாது என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான நோர்வே தூதுவர் ட்ரைன் ஜோரன்லி எஸ்கெடல் தெரிவித்துள்ளார்.

புதுப்பிப்புகளுக்கு @norwayinindia ஐப் பின்தொடருமாறு பொதுமக்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 13 ஆவது திருத்தத்தை...

மகா வித்தியாலயத்தில் நூற்றாண்டு விழா பாடசாலை அதிபர் ஏ. அரசரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாண சபைகள் அமைக்கப்பட்டதே வட, கிழக்கு மக்களுக்கான பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவே, ஆனால் மாகாண சபையில் உள்ளவர்களே, பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு மாகாண சபையின் அதிகாரங்களை குறைக்க வேண்டும் எனும் இரட்டை நிலைப்பாட்டில் உள்ளனர்.

முன்பு இருந்ததை விட தற்போது மாகாண சபைக்கு அதிகாரங்கள் உள்ளதாகவே காணப்படுகின்றது. அதனை நாம், சிறிது சிறிதாக அதிகரித்துக் கொள்ள திட்டங்களை வகுக்க வேண்டும்.

மாகாண சபைகள் தொடர்ச்சியாக இயங்கி வந்திருந்தால் இன்று அதிகாரங்களைக் கொண்டதாக அது காணப்பட்டிருக்கும்.

நாம் இன்று பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் கொண்டு வருவதாயின் மாகாண சபையின் அங்கீகாரம் பெற வேண்டிய அளவுக்கு தற்போது அதிகாரங்கள் வலுப்பெற்றுள்ளன. மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்கி அவற்றை சுயாதீனமாக இயங்கச் செய்வதே தற்போதைய ஜனாதிபதியின் நிலைப்பாடாகும் என்றார்.

## சீன கம்யூனிஸ்ட்...

குழுவின் செயலாளருமான யுவான் ஜியாஜூன் உள்ளிட்ட சீன தூதுக்குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

அதன் போதே அவர்கள் ஜனாதிபதியின் அர்ப்பணிப்பை பாராட்டியுள்ளனர்.

அத்துடன் இலங்கையின் எதிர்கால அரசியல், அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பிலும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதன் போது, இலங்கையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து யுவான் ஜியாஜூன் தலைமையிலான சீனத் தூதுக்குழுவினருக்கு விளக்கமளித்த ஜனாதிபதி, நாட்டிலுள்ள புதிய வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

மேற்படிச் செயற்பாடுகளுக்கான பிராந்திய ஒத்துழைப்புக்களை பலப்படுத்துவது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இலங்கையின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் அரசாங்கத்தின் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெளிவுபடுத்தியுள்ளார்.

அந்த நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன், இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கவுள்ளதோடு, தேசிய அபிவிருத்திக்கு அவற்றின் பங்களிப்பை எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சவால்களுக்கு மத்தியிலும் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அர்ப்பணிப்புக்கு பாராட்டு தெரிவித்த சீன தூதுக் குழுவினர், இலங்கையின் எதிர்கால அரசியல், அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பிலும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச அலுவல்கள் தொடர்பான பணிப்பாளர் தினுக் கொலம்பகே ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டுள்ளனர்.

## இந்திய கடன்..

கெஹெலிய ரம்புக்வெல்லவின் தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தில் இடம்பெற்றபோதே சுகாதார அமைச்சின் அதிகாரிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான எழுப்பிய கேள்வியொன்றின் போதே அமைச்சின் அதிகாரிகள் இதுதொடர்பில் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கடந்தகாலத்திலும் இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் அண்மைக்காலத்தில் மருந்து கொள்வனவுக்காக சம்பந்தப்பட்ட பிரிவினர் நடவடிக்கை எடுக்காதிருந்தால் மக்கள் மருந்துகள் இல்லாமல் மரணமடைந்திருப்பார்கள் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, பேராதெனிய வைத்தியசாலையில் சம்பவம் இடம்பெற்ற அந்த வார்ட்டிலேயே தங்கியிருந்த 12 நோயாளிகளுக்கு அந்த மருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த வருடத்திற்குள் குறித்த மருந்துகள் 1,67,000 உபயோகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அத்துடன் ஆஸ்பத்திரிகளுக்காக 2,30,000 மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த மருந்து 2013 ஒக்டோபர் 21 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறான மருந்தை எவ்வாறு தரங்குறைந்த மருந்தாக குறிப்பிட முடியும் என்றும் கேள்வியெழுப்பியுள்ள அமைச்சர் அவ்வாறான மருந்தாயின் தாம் அதனை நிராகரித்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். சுகாதார அமைச்சின் இந்த ஆலோசனை தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இராஜாங்க அமைச்சர்கள் சிசிர ஜயக்கொடி, டயனா கமகே, சிறிபால கம்லத் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், துறைசார்ந்த அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

## வட கடலில்...

மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது டிங்கி படகு ஒன்றில் கடத்திச் செல்லப்பட்ட 165 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது, சுமார் 165 கிலோ 400 கிராம் கேரள கஞ்சா அடைக்கப்பட்டிருந்த 75 பொதிகளை டிங்கி படகில் இருந்து கடற்படையினர் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் 36 வயதுடைய முள்ளியனைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.சந்தேகநபர் போதைப்பொருள் மற்றும் படகுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## பிரதான சந்தேக...

கடந்த 21 ஆம் திகதி நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்றுள்ளது. காணி தகராறில் ஏற்பட்ட மோதலின் போது அயலவர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டு நபர் ஒருவர் கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய அழகையா மகேஸ்வரன் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூடு நடத்திய நபர், காட்டுக்குள் தப்பிச் சென்றிருந்த நிலையில், அவரை பொலிஸார் கைது செய்தனர். உயிரிழந்த நபரும் துப்பாக்கிச் சூடு நடத்திய நபரும் சில காலம் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்திருந்ததாகவும், பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு எதிராக நீதிமன்றில் பல வழக்குகள் இருப்பதாகவும், நெடுங்கேணி பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

## தேர்தல் தொடர்பான...

உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ஐவர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த நீதிபதிகள் குழாமில் இடம்பெறும் நீதிபதி பிரியந்த ஜயவர்தன வேறுமொரு வழங்கில் பங்கேற்ற காரணத்தினால் மேற்படி மனுமீதான விசாரணை நாளை 26ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளதாக உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

குறித்த தினத்தில் கடந்த மார்ச் 09ஆம் திகதி உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வாக்கெடுப்பை நடத்தாமையினால் பொதுமக்களின் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு கோரியே மேற்படி அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேற்படி மனு நேற்றைய தினம் நீதிபதிகளான புவனேக அலுவிகார தலைமையிலான ஐவர் அடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாதிவெல...

அறிக்கை சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உத்தரவிட்டுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 19ஆம் திகதி, இந்த வீட்டுத் தொகுதியில் உள்ள வீட்டினுள் வெளிநபர் ஒருவர் நுழைந்த சம்பவம் தொடர்பில் பாதுகாப்புப் படையினரும் மிகவும் கலக்கமடைந்திருந்தனர். குறித்த நபர் இராணுவத்தினர் குழுமியிருக்கும் வீடொன்றிற்கு வந்துள்ளதாகவும், அதனை அடுத்துள்ள வீட்டில் வசிக்கும் சபை உறுப்பினர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இராணுவத்தினர் வீட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு நூற்றி இருபது வீடுகள் உள்ளன, அவற்றில் நூற்று பதினொரு வீடுகள் எம்.பி.க்களுக்காகவும், மீதமுள்ள ஒன்பது வீடுகள் வளாகத்தில் உள்ள பாதுகாப்புப் படைகள் மற்றும் சேவைப் பணியாளர்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகளை மாத வாடகையாக ஆயிரம் ரூபாயில் முன்பதிவு செய்ய எம்பிக்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருளுக்கான...

எரிபொருளுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர்,

அனைத்து நிறுவனங்களுக்கும் பொதுவான வகையில் விலை சூத்திரத்தைப் பயன்படுத்தி விலையை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நாட்டிற்கு நன்மை கிடைக்கும் வகையில் போட்டித்தன்மை கொண்ட எரிபொருள் விநியோகத்தை உருவாக்குவதே இதன் பிரதான நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மட்டுமே எரிபொருள் விலைச் சூத்திரத்தை முன்னெடுத்தது. இந்த புதிய முறையின் மூலம் அனைத்து நிறுவனங்களுக்கும் விலை சூத்திரத்தைப் பயன்படுத்தி அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## பொருளாதார...

இது தற்கொலையா அல்லது விபத்தா என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக கறுவாத்தோட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

47 வயதான அமல் சந்தரத்ன நுண் பொருளாதார நிறுவனம் ஒன்றின் தலைமை நிர்வாக அதிகாரி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அனைவரும் இணங்கினால்... 03ஆம் பக்கத் தொடர்

இதேபோன்று 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் வந்த போது எமது முஸ்லிம் சகோதரர்கள் நிம்மதியாக வாழ்ந்தனர். ஆனால் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலால் முஸ்லிம்கள் தெருவில் கூட இறங்க முடியாத நிலை ஏற்பட்டது. முஸ்லிம்கள் கடுமையாக சந்தேகிக்கப்பட்டனர்.

இந்த தாக்குதல் முஸ்லிம் மக்களால் மேற்கொள்ளப்பட்டதல்ல. சிலரது தேவையின் அடிப்படையில் நடந்த சம்பவம் இது. முஸ்லிம் தீவிரவாதம் அவர்களின் தேவைக்காக பயன்படுத்தியது. பாராளுமன்றத்தில் இதனை பலமுறை கூச்சல் போட்டு தெளிவுபடுத்தினோம்.

ஐக்கிய தேசியக் கட்சியினாலேயே பேருவளை தொகுதியை வெற்றிகொள்ள முடிந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு சிங்கள சகோதரர் ஒருவர் வந்தால் கட்சியின் தலைவர் பதவியோ அல்லது கட்சியின் பொருளாளர் பதவியோ முஸ்லிம் சகோதரருக்கோ அல்லது தமிழ் சகோதரருக்கோ வழங்கப்படும். ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் இன ஒற்றுமைக்காகவே முன் நிற்கின்றது என்றார்.

## 16 வயதுடைய மூன்று... 03ஆம் பக்கத் தொடர்

அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கம்பஹா பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று மேற்படி மூன்று சிறுமிகளையும் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதா தெரிவிக்கின்றனர்.

## ஜயந்த கெடகொட... 03ஆம் பக்கத் தொடர்

மூலம் அதனை மேற்கொள்ள முடியுமென்றும் அத்துடன் சர்வஜன வாக்கெடுப்பொன்றை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

அதற்கிணங்க, மேற்படி சட்டமூலத்தில் அடங்கியுள்ள விடயங்கள் அரசியலமைப்புக்கு முரணானவை என தீர்ப்பொன்றை வழங்குமாறு கோரி தாக்கல்செய்யப்பட்டுள்ள மனுக்கள் நேற்றைய தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பிரதி சொலிசிட்டர் ஜெனரல் இவ்வாறு நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

## வீடு கட்டித் தருவதாக ஏமாற்றி... 03ஆம் பக்கத் தொடர்

செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்ததனர்.

மேற்படி சந்தேக நபர் மாலபே பகுதியில் நிறுவனமொன்றை நடத்திச் சென்றுள்ள நிலையில் வீடொன்றை நிர்மாணித்துத் தருவதாக கூறி சில நபர்களிடம் 34,375,000.00 நிதியை மோசடி செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள நபர் கடுவலைப் பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதானவர் என்றும் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பொறுமை காப்போம்

# அன்பின் மற்றொரு பரிமாணம் பொறுமை

ஒரு தாய்க்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர்.அந்த மூவரில் இரு பிள்ளைகள் நன்னடத்தையோடும் மதிப்போடும் வாழ்ந்து வந்தனர்.

ஒருவன் மட்டும் பலர் முகம் சுளிக்கும் வண்ணம் வாழ்ந்தான். அவனைப் பார்க்கும் போதெல்லாம் மற்றவர்கள் கரித்துக்கொட்டினர்.

அவனுடைய தந்தையோ "நான் தானா உன்னைப் பெற்றேன்! " என்று சொல்லிக் கொள்வார். இவற்றால் அவனுடைய குணங்கள் மாறவில்லை. மாறாக நிலைமை மோசமானது.



ஆனால் அவனுடைய தாய் மட்டும் அவன் மேல் மிகுந்த பொறுமை கொண்டிருந்தாள். "என்ன இருந்தாலும் நான் பெற்ற மகனல்லவா" என்ற பாசப் போராட்டத்தில் பொறுமை காத்தாள். அனைவரும் அத்தாய் தன் மகனின் தவறுகளுக்கு ஆதரவாய் இருப்பதாக எண்ணினர்.ஆனால் நாளடைவில் அந்தத் தாயின் பொறுமை அம் மகனின் வாழ்க்கையையே மாற்றியது.

பொறுமை கடலினும் பெரிது என்பார்கள். பொறுமை என்பது அன்பின் மற்றொரு பரிமாணம். மன்னிப்பின், கனிவின் அடையாளம். அது அனைவராலும் கடைபிடிக்கப்பட வேண்டிய மிக உயரிய பண்பு.

கடந்த ஞாயிறு முதல் வாசகத்தில் தந்தையாம் கடவுள் பொறுமையுள்ளவர் என்பதை நாம் வாசிக்கிறோம்.

அவருடைய பொறுமைதான் இன்றும் இந்த உலகைத் தாங்குகிறது என்றால் அது மிகையாகாது.

மனிதர்களாகிய நாம் செய்கின்ற பிழைகளையெல்லாம் பொறுத்து, நம்மை மனம் மாற அழைக்கின்றார் கடவுள்.

இதைத் தெளிவாக விளக்குகிறது நற்செய்தி வாசகம். நல்ல விதைகள் விதைக்கப்பட்ட நிலத்தில் விதைகளின் மத்தியில் விழுந்தது களைகள்.

கடவுள் உலகைப் படைத்து அதை நல்லதெனக்கண்டார். ஆனால் அலகையின் சூழ்ச்சியால் பாவம் விளைந்தது. அதற்காக அவர் உடனே உலகையோ தன் படைப்புகளையோ அழித்து விடவில்லை. பொறுமை காத்தார்.

அத்தகைய கடவுளின் பிள்ளைகள் நாமும் பொறுமையை கடைபிடிக்க வேண்டும். ஆனால் நாமோ "களைகளை பிடுங்கி எறியட்டுமா?" என்ற ஊழியர்களைப்போல பொறுமையிழந்தவர்களாய் வாழ்கிறோம்.

கடவுள் நல்லர்கள் மேலும் கெட்டவர்கள் மேலும் பொறுமை காட்டுகிறார். எதற்காக? வாழ்வு மாற்றம் பெற. ஏற்றம் பெற. அவர் நம்மீது பொறுமையோடு இருப்பது போல நாமும் பிறர் மீது பொறுமையோடு இருந்தால் எல்லோர் வாழ்வும் ஏற்றம் பெறும்.

**அருட்பணி குழந்தை இயேசு பாபு**

## பங்குத்தந்தையர்களின் பாதுகாவலர்

## புனித ஜான் மரிய வியான்னி



கத்தோலிக்கத் திருச்சபை கடந்த ஞாயிறில் சுதேச குருக்கள் தினத்தை சிறப்பித்தது.

சிறப்பு வாய்ந்த புனிதரும் பங்குத்தந்தையர்களின் பாதுகாவலருமான புனித ஜான் மரிய வியான்னி பளிமையான வாழ்க்கை, பரிவுடன் கூடிய செயல்கள், திருவருளடையாளங்களில் பற்றுறுதி, இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் ஆர்வம் கொண்டு மனிதராக வாழும்போதே புனித பண்புகளால் சிறந்து விளங்கியவர்

திருநற்கருணையின் முன்னால் செலவிடும் நேரத்தைப் பொன்னான நேரமாகக் கருத வேண்டும் என்று கூறியதோடு மட்டுமல்லாமல் அதன்படியே வாழ்ந்தவர்

தனது வாழ்வின் ஆற்றல் திருநற்கருணையில் இருந்தே கிடைக்கின்றது என்பதனை தனது செப செயல்பாடுகளால் வெளிப்படுத்தியவர். எளிமையான பிறரன்புச் செயல்கள் வழியாக இறைமக்களாகிய நமக்கு விண்ணகம் செல்லும் புனிதத்தின் பாதையைக் காட்டியவர்.

தான் குருவாக திருப்பொழிவு பெற்றால் கடவுளுக்காக ஏராளமான ஆன்மாக்களை வென்றெடுப்பேன் என்ற கூறி அவ்வாறே பல ஆன்மாக்களை இறைபாதம் கொண்டு சேர்த்தவர்.

ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் அருள்பணித்துவ அழைப்பு, அவரவர் திறமையின் அடிப்படையில் வழங்கப்படும் சன்மானம் அல்ல, மாறாக, இறைவனின் பேரன்பினால் வழங்கப்படும் ஒரு பெரும் கொடை என்பதை நமக்கு உணர்த்தியவரும் புனித ஜான் மரிய வியான்னியே.

**மெரினா ராஜ்**




## ஜோசப்வாஸ் மன்றத்தின் நற்செய்திப் பெருவிழா










கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றம் ஏற்பாடு செய்திருந்த திருவிழிப்பு, நற்செய்தி பெருவிழா கொட்டாஞ்சேனை சென்.பெனடிக் கல்லூரி வளாகத்தில் கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு என்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. இந்தியாவிலிருந்து வருகை தந்த அருட்சகோதரர் ஜோர்ஜ் தரகனின் வழிநடத்தலில் ஜோசப் வாஸ் மன்றத்தின் ஸ்தாபகர் அருட்தந்தை ஆனந்தன் புள்ளே அடிகளார், அருட்தந்தை ரூபன் உட்பட அருட்தந்தையர்கள் பலரது பங்கேற்புடன் விமரிசையாக நடைபெற்றது. நற்செய்தி பெருவிழாவின் காட்சிகளை படங்களில் காணலாம்.

படங்கள்: வட கொழும்பு தினகரன் நிருபர்

# நற்செயல்கள் வழியாக தீமையை வெல்வோம்

பொதுக்காலத்தின் 1ஆம் ஞாயிறாக இந்த ஞாயிறு சிறப்பிக்கப்பட்டது. ஞாயிறு வாசகங்கள் நற்செயல்கள் வழியாக தீமையை வென்று இறையாட்சியை விதைப்போம் என்ற சீரிய சிந்தனையை நம் உள்ளத்தில் விதைக்கின்றன

துறவு மடம் ஒன்றில் குரு அமர்ந்து தனது சீடர்களுக்குப் போதித்துக்கொண்டிருந்தார். அன்அவருடய போதனை நன்மை தீமைக் குறித்து அமைந்திருந்தது.

அப்போது அவர் தனது சீடர்களைப் பார்த்து, "ஒவ்வொரு மனிதருடைய உள்ளத்திலும் நன்மை தீமை என்ற இரண்டுவிதமான ஓநாய்கள் வாழ்கின்றன. அவைகள் தங்களுக்குள் எப்போதும் சண்டையிட்டுக்கொண்டே இருக்கின்றன" என்றார்.

உடனே எழுந்த சீடர் ஒருவர், "அப்படியென்றால், அந்தச் சண்டையில் இறுதியில் எந்த ஓநாய் வெற்றிபெறும் என்றும் ஆவலாய்க் கேட்டார். "நீ எந்த ஓநாய்க்கு அதிக உணவூட்டி வளர்க்கிறாயோ அந்த ஓநாய்தான் இறுதியில் வெற்றிபெறும்" என்றார்

குரு. அதற்கு அச்சீடர், சற்று புரியும்படி கூறுங்கள் குருவே" என்றார்.

"நீ நன்மை என்ற ஓநாய்க்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கேற்ற காரியங்களைச் செய்தால், நலமான காரியங்கள் உன் வாழ்வில் நிகழும். அதற்குப் பதிலாக, நீ தீமையென்ற ஓநாய்க்கு முக்கியத்துவம் கொடுத்தால், தீமையான காரியங்களைத்தான் நீ அறுவடை செய்வாய்" என்றார். குருவின் இந்த விளக்கத்தை அனைவருமே புரிந்து கொண்டனர்.

பொதுக்காலத்தின் 16ஆம் ஞாயிறாக இந்த ஞாயிறு சிறப்பிக்கப்பட்டது. ஞாயிறு வாசகங்கள் நற்செயல்கள் வழியாக தீமையைவென்று இறையாட்சியை விதைப்போம் என்ற சீரிய சிந்தனையை நம் உள்ளத்தில் விதைக்கின்றன.

முதல் வாசகம் என்றுமுள்ள இறைவனின் நீதித் தீர்ப்பையும் அவரது வலிமையையும் ஆற்றலையும் எடுத்துரைக்கின்றது. குறிப்பாக, 'அனைத்தின்மீதும் உமக்குள்ள ஆட்சியுரிமை அனைத்தையும் வாழும்படி விட்டு வைக்கிறது' என்ற இறைவார்த்தைகள் இன்றைய நற்செய்தியில் இயேசு கூறும், 'வயலில் தோன்றிய களைகள்' பற்றிய உவமையில் வரும்,

அறுவடைவரை இரண்டையும் வளர விடுங்கள். அறுவடை நேரத்தில் அறுவடை செய்வோரிடம், 'முதலில் களைகளைப் பறித்துக் கொண்டு வந்து எரிப்பதற்கெனக் கட்டுகளாக் கட்டுங்கள். கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்' என்ற இறை வார்த்தைகளுடன் ஒத்துப்போகின்றன.



கடந்த வார ஞாயிறன்று, 'விதைப்பவர் உவமை' பற்றி கூறி அதற்கு விளக்கமளித்த ஆண்டவர் இயேசு, இவ்வாரம் அதனைத் தொடர்ந்து, 'வயலில் தோன்றிய களைகள்', 'கடுகு விதை', 'புளிப்பு மாவு' என மூன்று உவமைகள் வழியாக இறையாட்சிப் பற்றியும் இவ்வுலகின் முடிவில் நிகழவிருக்கும் இறுதித் தீர்ப்புப் பற்றியும் நமக்குத் தெளிவுபடுத்துகின்றார்.

அவை ஒவ்வொன்றையும் நாம் சிந்திப்போமானால்,

வயலில் தோன்றிய களைகள் உவமை

உண்மையில் மானிடரின் வாழ்வு வியப்புகள் நிறைந்த ஒன்றுதான். ஒவ்வொரு மனிதரும் கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்படுகின்றனர். அப்படியென்றால், இயல்பில் எல்லோருமே நல்லவர்களாகப் பிறக்கின்றோம்.

அப்படி கடவுளுக்குரிய நன்மைத்தனங்களுடன் பிறக்கும் நாம், வளர வளர சாத்தானுக்குரிய தீமைகளின் இயல்புகளும் நம்முடன் சேர்ந்து வளரத் தொடங்குகின்றன. இவற்றைக் கொணர்வது சாத்தான்தான்.

எனவேதான், இவ்வுலகில் 80 விழுக்காடு தீமை நிறைந்த மனிதர்களையும், வெறும் 20 விழுக்காடு மட்டுமே நன்மைத்தனம் கொண்ட நல்ல மனிதர்களைப் பார்க்கின்றோம். அதாவது பாவத்தின் செயல்பாடுகள் நன்மையின் செயல்பாடுகளைவிட அதிகம் இருக்கின்றன.

அப்படியென்றால் தீமையானவர்களோடு இணைந்து நல்லவர்களும் வாழவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். "ஒருவர் தம் வயலில் நல்ல விதைகளை விதைத்தார். அவருடைய ஆள்கள் தூங்கும் போது அவருடைய பகைவன் வந்து கோதுமைகளுக்கிடையே களைகளை விதைத்துவிட்டுப் போய்விட்டான் பயிர் வளர்ந்து கதிர் விட்ட போது களைகளும் காணப்பட்டன" என்ற இயேசுவின் வார்த்தைகள் இதனை உறுதி செய்கின்றன.

ஆக, நாம் எவ்வளவுக்கெவ்வளவு நல்லவர்களாக வாழ முற்படுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு தீமையின் ஆதிக்கத்தோடுப் போராடவேண்டியிருக்கும் என்பதை இயேசு நமக்குத் தெளிவுபடுத்துகிறார்.

அதேவேளையில், தீமைகளே அல்லது தீமையாளர்களே இல்லாமல் வாழமுடியாது என்றால் அதற்குச் சாத்தியமில்லை என்றுதான் கூறவேண்டும். மேலும் நமது வேண்டுகோளுக்கிணங்க தீமைகளையோ அல்லது தீமையாளர்களையோ கடவுள் அழிக்க முற்படும்போது அது ஒருவேளை நமக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

"ஆண்டவரே, இப்படி அநியாயமும் அக்கிரமும் செய்கிறவர்களோடு என்னையும் சேர்ந்து வாழ வச்சுட்டீங்களே" என்று நாம் பலநேரங்களில் புலம்பித் தவிக்கின்றோம். தீமையாளர்களின் கொடுஞ்செயல்களைக் கடவுள் ஒருபோதும் மறந்துவிடுவதில்லை என்பதையும், அவர்கள் இறுதிநாளில் பழிதீர்க்கப்படுவர் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

நமது கிராமங்களில், ", கடவுளின் செயல்களிலிருந்து நீ எப்பவும் தப்பவே முடியாது, அவரது கணக்கு எப்பவும் சரியாகத்தான் இருக்கும்" என்று கூறுவதுண்டு. இதனை நாம் எப்போதும் மனதில் இருத்திக்கொள்ளவேண்டும். அதேநேரம், நாம் தீமையாளர்களுடன் ஒன்றாக வாழ நேர்ந்தாலும், நமது நன்மைத்தனங்களிலுருந்து ஒருபோதும் தடம்புரண்டு விடாமலும் பாதை மாறிப் பயணிக்காமல் இருக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற உயரிய பாடத்தை இயேசு இவ்வுவமையின் வழிநின்று நமக்குக் கற்றுத் தருகின்றார். இப்போது நற்செய்தி கூறும் அப்பகுதியை வாசித்தால் நமக்கு புரியும். நிலக்கிழாருடைய பணியாளர்கள் அவரிடம் வந்து, 'ஐயா, நீர் உமது வயலில் நல்ல விதைகளை அல்லவா விதைத்தீர்? அதில் களைகள் காணப்படுவது எப்படி? என்று கேட்டார்கள். அதற்கு அவர், 'இது பகைவனுடைய வேலை' என்றார். உடனே பணியாளர்கள் அவரிடம், 'நாங்கள் போய் அவற்றைப் பறித்துக் கொண்டு வரலாமா? உம் விருப்பம் என்ன?' என்று கேட்டார்கள். அவர், 'வேண்டாம், களைகளைப் பறிக்கும்போது அவற்றோடு சேர்த்துக் கோதுமையையும் நீங்கள் பிடுங்கிவிடக் கூடும். அறுவடைவரை இரண்டையும் வளர விடுங்கள். அறுவடை நேரத்தில் அறுவடை செய்வோரிடம், 'முதலில் களைகளைப் பறித்துக் கொண்டு வந்து எரிப்பதற்கெனக் கட்டுகளாகக் கட்டுங்கள். கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்' என்று கூறுவார்.

நன்மை தீயை மூட்டுவோம்

உலகம் முழுவதும் தீமைக்கு எதிராக நன்மை தீயை மூட்ட நாம் அழைக்கப்படுகிறோம். இதன் காரணமாகவே, "மண்ணுலகில் தீமூட்ட வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். ஆயினும், நான் பெற வேண்டிய ஒரு திருமுழுக்கு உண்டு. அது நிறைவேறுமளவும் நான் மிகவும் மன நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறேன்" (லூக் 12:4950) என்கின்றார் இயேசு.

இங்கே இயேசு மண்ணுலகைத் தீயினால் அழிக்க வந்ததாக நாம் தவறான பொருள் கொள்ள கூடாது. மாறாக களைகளாக முளைத்து இவ்வுலகைத் தீமையால் அழிக்கத் துடிக்கும் சாத்தானின் செயல்களுக்கும், கொள்கைகளுக்கும் எதிராகத் தீமூட்ட வந்ததாகக் கூறுவதாகவே நாம் உண்மைப் பொருள் கொள்ளவேண்டும்.

சாத்தானின் தீயசெயல்களுக்கு எதிரான நமது போராட்டத்தில் இயேசுவுக்குத் துணை நின்ற தூய ஆவியார் நமக்கும் துணையாக இருக்கிறார் என்பதை நமக்கு உணர்த்தும் விதமாகவே, "தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணைநிற்கிறார்; ஏனெனில், எதற்காக, எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது; தூய ஆவியார் தாமே சொல்வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்துபேசுகிறார்.

நம்மைக் காக்க ஆண்டவராம் இயேசு நம்முடன் பயணிக்கிறார் என்பதை உணர்ந்து கொள்வோம். இயேசுவின் வழியில் நற்கோதுமை பயிர்களாய், கடுகு விதைகளாய், புளிப்பு மாவாய் புவியில் வாழ்ந்து இறையாட்சியை எட்டுத்திக்கும் பரவிடச் செய்வோம்.

**அருட்பணி**
**செல்வராஜ் சூசைமாணிக்கம்**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் ஆடி மாதம் 09ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 முஹர்ரம் பிறை 06



**குறள் தரும் சிந்தனை**

குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து

பிறந்த குடிக்குப் பெருமை சேர்ப்பவரிடமுள்ள சிறிய குறைகள், ஒளிவு மறைவு ஏதுமின்றி, வானத்து நிலவில் உள்ள குறைபோல வெளிப்படையாகத் தெரியக் கூடியதாகும்.

# உலகளாவிய அனுபவங்களால் பொருளாதார அபிவிருத்தி

இலங்கையும் இந்தியாவும் மிகவும் நீண்ட கால நட்புநாடுகளாகும். இருநாடுகளும் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அமைந்துள்ளதோடு அயல்நாடுகளாகவும் உள்ளன. எனினும் இந்தியா இலங்கையை விடவும் பொருளாதார ரீதியில் பல மடங்கு வளர்ச்சியடைந்துள்ளதோடு, உலகின் நான்காவது பெரிய பொருளாதார நாடாகவும் விளங்குகிறது. ஆனாலும் தாம் மட்டும் வளர்ச்சி அடைந்தால் போதாது, தம்மைப் போன்று ஏனைய நாடுகளும் பிராந்தியங்களும் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதில் அக்கறை கொள்ளும் தேசமாகவும் உள்ளது.

அந்த வகையில் 'அயல்நாடு முதலில்' என்ற கொள்கைக்கு அமைய தமது அயல்நாடுகளுக்கு உதவி, ஒத்துழைப்புகளை நல்குவதில் இந்தியா முன்னிலை வகித்து வருகின்றது. அந்த அடிப்படையில் இலங்கைக்கு சமூக, பொருளாதார, கலாசார ரீதியில் நீண்ட காலமாக உதவி ஒத்துழைப்புகளை இந்தியா நல்கி வருகின்றது. கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அந்நிய செலாவணி பற்றாக்குறையோடு இந்நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது.

அச்சமயத்தில் இலங்கைக்கு அந்நிய செலாவணி மற்றும் எரிபொருள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகள் அடங்கலாக பல்வேறு உதவி ஒத்துழைப்புக்களையும் தொடராக வழங்கி வந்தது. அதாவது இப்பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு பாதிப்பாகவும் தாக்கமாகவும் இருப்பதைக் குறைப்பதற்கு தம்மாலான உதவிகளை வழங்கியது. கடந்த வருடத்தின் முதல் 4 மாதங்களிலும் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேற்பட்ட நிதியை வழங்கியது.

இந்நிலையில் இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசிப்பதற்கு இந்தியா அளித்துள்ள ஒத்துழைப்புகள் பாரிய பங்களிப்புகளை நல்கியுள்ளன. அவை என்றும் மறுக்க முடியாத உதவி ஒத்துழைப்புகள்.

இவ்வாறான சூழலில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இராஜதந்திர உறவு ஆரம்பிக்கப்பட்டு 75 வருடம் நிறைவடைந்துள்ளது. இந்நிலையில் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரப் பிற்பகுதியில் இரண்டு நாட்கள் விஜயத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்தார். இவ்விஜயம் பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இடம்பெற்ற அதேநேரம், அங்கு இடம்பெற்றுள்ள பேச்சுவார்த்தைகளும் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் இந்நாட்டு பொருளாதார மறுமலர்ச்சியில் நம்பிக்கை அளிக்கும் புதிய அத்தியாயத்தைத் தொடக்கி வைக்கும் என்பதில் ஐயமில்லை.

உலகில் வளர்ந்து வரும் மிகப்பெரிய பொருளாதாரப் பிராந்தியங்களில் ஒன்றாக இந்து சமுத்திரப் பிராந்தியமும் விளங்குகிறது. அடுத்த இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களில் உலகின் மொத்த முன்னேற்றத்தில் மூன்றிலிரண்டு ஆசிய, பசுபிக் பிராந்தியத்தில் ஏற்படும். இது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விடயமாக உள்ளது. அதில் இந்தியாவும் சீனாவும் முன்னிலை வகிக்கும். இதனை எவ்வித விவாதமும் இன்றி சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது. அதனால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள இந்த பாரிய அபிவிருத்தி வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உலகில் எந்தவொரு நாடும் தனித்து நின்று முன்னேற முடியாது. உலகில் உள்ள அனைத்து அபிவிருத்தியடைந்த நாடுகளும் பிராந்திய கூட்டாண்மை மூலம் அந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளன. உதாரணத்திற்கு ஐரோப்பிய ஒன்றியத்தை எடுத்து நோக்கினால், அந்நாடுகள் இணைந்து செயற்பட்டதன் காரணமாக முழு ஐரோப்பிய பிராந்தியமும் வளர்ச்சியடைந்தது. அதேபோன்று மத்திய கிழக்கு நாடுகளைப் பொறுத்தவரையிலும் இதேநிலைதான் காணப்படுகிறது. சீனாவைப் போன்றே, அமெரிக்கப் பிராந்தியமும் அதே முறையில் அபிவிருத்தியடைந்தது.

இவ்வாறான சூழலில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதி ஊடக மையத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில், இருதரப்பினருக்கும் நன்மை பயக்கும் வகையில் இந்திய_இலங்கை உறவுகளை மேம்படுத்தி இலங்கையின் அபிவிருத்தி எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வேலைத்திட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ளார். இது இருநாடுகளுக்கும் மாத்திரமல்லாமல் பிராந்தியத்தியத்திலும் நல்லதொரு நிலையை ஏற்படுத்தும். குறிப்பாக வளர்ந்து வரும் உலகின் மிகப்பெரிய பொருளாதாரப் பிராந்தியங்களில் ஒன்றாக விளங்கும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அபிவிருத்தி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு' என்று தெரிவித்துள்ளார்.

உண்மையில் எந்தவொரு நாடும் பொருளாதார ரீதியில் தனித்துநின்று முன்னேற முடியாது. இதற்கு உலகில் முன்னேற்றமடைந்துவரும் நாடுகளே நல்ல சாட்சியங்களாக உள்ளன. அதனால் பொருளாதார ரீதியில் முனனேற்றமடைவதை இலக்காகக் கொண்ட நாடுகள் தம்மிடமுள்ள வளங்கள் மற்றும் திறமைகளை மாத்திரமல்லாமல் அயல்நாடுகளதும் பிராந்தியங்களதும் அபிவிருத்தி ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வதில் பின்னிற்பதில்லை. இந்த அனுபவங்களின் அடிப்படையில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை உண்மையாகக் கட்டியெழுப்புவதில் கவனத்தை குவித்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளார். நாட்டில் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதே அவரது இலக்காக உள்ளது. அதுவே துரித அபிவிருத்திக்கும் பக்கபலமாக இருக்கும்.

ஆகவே பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் நாட்டிற்கு நிச்சயம் மறுமலர்ச்சியைக் கொண்டு வரும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# ஆஷூரா: இமாம் ஹுஸைன் (ரழி) அவர்களின் தியாகத்தை நினைவுகூரும் காலம்

இஸ்லாத்தின் புனித மாதங்களில் முஹர்ரம் மாதமும் ஒன்றாகும். இது இஸ்லாமிய வருடக்கணிப்பில் முதல் மாதமாக அமைந்திருப்பதோடு, இம்மாதத்தின் பத்தாம் நாள் ஆஷூரா தினமாக விளங்குகிறது.

அன்றைய மதீனாவில் வாழ்ந்த யூதர்கள் அத்தினத்தில் நோன்பு நோற்றதை அவதானித்த முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அதற்கான காரணத்தை அவர்களிடம் வினவினார்கள். அதற்கு அவர்கள் "மூஸா (மோசஸ்) நபி (அலை) அவர்களும் அவர்களது சமூகத்தினரும் கொடுங்கோலன் பிரஅவ்னிடமிருந்து பாதுகாக்கப்பட்ட நாள் அது. அதனால் அதற்கு இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக மூஸா நபி (அலை) அவர்கள் நோன்பு நோற்றார்கள். அதன்படி நாமும் நோன்பு நோற்கின்றோம்" என்றார்கள்.

அப்போது நபி (ஸல்) அவர்கள் "உங்களை விட நானே மூஸா நபிக்கு நெருக்கமானவன்" எனக் கூறி தானும் நோன்பு நோற்று தமது தோழர்களையும் நோற்கச் செய்தார்கள். அத்தோடு "அடுத்த வருடம் நான் உயிருடன் இருந்தால் ஆஷூரா தினத்துடன் சேர்த்து இன்னொரு நாளும் நோன்பு நோற்பேன்" என்றும் கூறினார்கள்.

அதேநேரம் "ஆஷூரா நோன்பு சென்ற ஒரு வருடத்தின் பாவங்களுக்கு பரிகாரமாக அமையும்" என்றும் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வாறு ஆஷூரா தினம் மகத்துவம் பெற்று விளங்குகின்ற அதேவேளையில், முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பேரர்களில் ஒருவரான ஹுஸைன் (ரழி) அவர்கள் ஈராக்கிலுள்ள கர்பலா சமவெளியில் ஹிஜ்ரி 61 (கி.பி 680) இல் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட தினமாகவும் இத்தினம் விளங்குகிறது. அன்றைய உமையா ஆட்சிக்காலத்தில் யஸீதின் ஆட்சிக்கு விசுவாசப் பிரமாணம் செய்ய மறுத்த ஹுஸைன் (ரழி) அவர்கள், அந்த கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகப் போராடி மடிவதே மேல் எனக் கருதி செயற்பட்டார்கள். கொடுங்கோன்மையை ஒழித்துக்கட்டவும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்த இஸ்லாமிய பாரம்பரிய ஆட்சி முறைமையை பாதுகாக்கும் நோக்கிலேயே அவர் இப்போராட்டத்தை முன்னெடுத்தார்.

அன்னாரின் வாழ்க்கை வரலாற்றையும் அர்ப்பணிப்புகளையும் பற்றி பல இஸ்லாமிய அறிஞர்களும் எழுதியுள்ளனர். குறிப்பாக இஸ்லாமிய வரலாற்றாசிரியர் தபரி சுமார் இருநூறு பக்கங்களில் இமாம் ஹுசைன் (ரழி) அவர்களது தியாகம் பற்றி எழுதியுள்ளார். அதன்படி கர்பலா நிகழ்வு போன்ற வேறு எந்த நிகழ்வும் அவரது அதிக கவனத்தை ஈர்த்திருப்பதாகத் தெரியவில்லை. அத்தோடு முஸ்லிம் அல்லாத அறிஞர்களும் கூட ஹுசைன் (ரழி) அவர்கள் பற்றி தாராளமாக எழுதியுள்ளார்கள்.

அதனால் ஹுசைன் (அலை) அவர்களின் வாழ்க்கை மற்றும் அர்ப்பணிப்புக்களை நாம் ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதன் ஊடாகப் படிப்பினைகள் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படிப்பினைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தோடு முற்றுப் பெறக்கூடியவை அல்ல. அவை எல்லாக் காலத்திற்கும் படிப்பினைகள் அளிக்கக் கூடியவை.



ஆஷூராவிடமிருந்து நாம் அர்ப்பணிப்பு, தைரியம், நீதி மற்றும் இறைவனின் நோக்கத்திற்காக எழுந்திருத்தல், அன்பு, இரக்கம் ஆகியன தொடர்பில் பாடங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இதன் நிமித்தம் ஹுஸைன் (ரழி) அவர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொண்ட ஒழுங்கே மாபெரும் படிப்பினையாக இருந்து கொண்டிருக்கின்றது.

இது வரலாற்றில் ஒரு மகத்துவம் மிக்க சாட்சியமாக முழு மனிதகுலத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. ஹுசைன் (அலை) அவர்கள் அத்தகைய நாளுக்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டார்கள். அன்னாரது 50 வருட கால இவ்வுலக வாழ்க்கையில் அவரது குழந்தைப் பருவம் தனியொரு பாடமாக அமைந்திருக்க, அதே நேரம் அன்னாரது இளமைப் பருவமும் அவரது தியாகத்திற்குப் பின்னரான அவரது நடத்தையும் கூட படிப்பினைகளாகவே இருந்து கொண்டிருக்கின்றன. அவர் அளித்துள்ள படிப்பினைகள் அவரது இறுதிநாளோடு முற்றுப்பெறக்கூடியவை அல்ல. மாறாக சூரியனைப் போன்று மற்ற எல்லா விளக்குகளையும் மறைக்கும் அளவுக்கு மகத்துவத்தையும் சிறப்பையும் பெற்றுள்ளன. இமாம் ஹுசைன் (ரழி) அவர்கள் வலுவான மனஉறுதியுடன் அடக்குமுறை மற்றும் ஊழல் அமைப்புகளுக்கு எதிராக போராடுவதற்கும் கொடுங்கோன்மை ஆட்சியை அனைத்து காலகட்டங்களிலும் எதிர்ப்பதற்கும் தனிநபர்களுக்கு ஊக்கமளித்தார். விசுவாசிகளின் இதயங்கள் கர்பலாவை நோக்கித் திரும்புகையில், அங்கு தியாகிகளுடனான சந்திப்பு இடம்பெறுகையில், இமாம் ஹுசைன் (ரழி) அவர்களின் குருதி புதுப்பிக்கப்படுகையில் சில இடங்களில் கடந்த காலங்களில் மறைக்கப்பட்ட நயவஞ்சகத்தனமும் வெளிப்படவே செய்கிறது.

தங்களை முஸ்லிம்கள் என்று அழைத்துக் கொள்ளும் சில தக்ஃபிரிய குழுக்கள் மிருகத்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். நடைமுறையில் அவர்களுக்கு இஸ்லாத்தின் உயர் சட்டங்களுடன் எந்தத் தொடர்பும் இருப்பதாக இல்லை. இப்பயங்கரவாதிகள் சியோனிச ஆதரவு கொண்டவர்கள்.

அதனால்தான் பள்ளிவாசல்கள் என்றும் கூடப் பாராமல், குண்டுகளை வைத்து, வணக்க வழிபாடுகளில் ஈடுபடும் முஸ்லிம்களைப் படுகொலை செய்கின்றனர். தக்ஃபிரி மற்றும் பிற வழிகெட்ட குழுக்கள் இன்று முஸ்லிம்களை படுகொலை செய்த வண்ணம் உள்ளன. நிச்சயமாக ஈனச்செயல் கருணைமிக்க தூதரால் நமக்குக் கற்பிக்கப்பட்டவை அல்ல. அதனால் முஹர்ரம் பயங்கரவாதத்தின் வேர்களை அம்பலப்படுத்துவதற்கு மனசாட்சியைத் தூண்டக்கூடிய மாதமாக விளங்குவதாகவும் குறிப்பிடலாம்.

இமாம் ஹுஸைன் (ரழி) அவர்கள் நீதிக்கான இயக்கத்தின் முன்னோடி ஆவார். நல்லவற்றை ஏவும் மற்றும் தீயவற்றை விலக்கும் அமைப்புகளுக்கான முன்னோடியும் கூட. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் இறுதித் தூதர் முஹம்மத் முஸ்தபா (ஸல்) அவர்களின் பேரனால் தொடங்கப்பட்ட இவ்வியக்கம் 1385 ஆண்டுகளுக்கும் மேலாக, இன்னும் பலத்திலிருந்து வலிமைக்குச் செல்லும் ஒரு பேரியக்கமாக உள்ளது. ஆகவே ஆஷூரா நோன்பை நோற்று அதன் சிறப்புக்களை அடைந்து கொள்வதோடு, இமாம் ஹுஸைன் (ரழி) அவர்களின் அர்ப்பணிப்புகளையும் முயற்சிகளையும் மீட்டிப் பார்ப்பதும் படிப்பினைகள் பெற்றுக்கொள்வதும் பயன்மிக்கதாக இருக்கும்.

– தாஹா முஸம்மில்

# தமிழ்நாட்டிலுள்ள சோழ வம்சத்தினரின் ஒத்துழைப்பு பெற்று திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி ஆலயம் புதுப்பொலிவு

**ஆலய பரிபாலனசபையினருடனான கலந்துரையாடலில் ஆளுநர் செந்தில் தொண்டமான் நம்பிக்கை**

அம்பாறை மாவட்டத்தில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி ஆலயமானது தமிழகத்திலுள்ள சோழர்கால வம்சத்தினருடன் இணைந்து புதுப்பொலிவு பெறும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தன்னைச் சந்தித்த ஆலய குழுவினரிடம் நம்பிக்கை தெரிவித்தார் .

திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையிலான குழுவினருக்கும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அச்சமயம் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம், இந்துசமய விடயங்களின் ஆர்வலர்களான வி.ரி.சகாதேவராஜா, சுந்தரலிங்கம் முகுந்தன் (லண்டன்) ஆகியோர் உடனிருந்தனர். சித்திரவேலாயுதசுவாமி ஆலய பரிபாலன சபையின் சார்பில் பொருளாளர் கே. கிருஷ்ணமூர்த்தி, கணக்குப்பிள்ளை எஸ்.லோகிதராஜா, பதில் செயலாளர் கே. சதீஷ்குமார், பணியாளர் கே.நடேசபிள்ளை ஆகியோரும் ஆளுநர் செந்தில் தொண்டமானுடனான சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஓகஸ்ட் 16 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைகின்றது. அதனையொட்டி இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.





இலங்கையின் சில பிரதேசங்களில் சோழர்களின் ஆட்சி நிலவிய பண்டைக்காலத்தில் நிருமாணிக்கப்பட்ட பழம்பெரும் ஆலயமான திருக்கோவில் சித்திரவேலாயுதசுவாமி ஆலயம் தொடர்பான வரலாற்று விபரங்களை பரிபாலன சபையினர் ஆளுநரிடம் எடுத்துரைத்தனர்.

ஆலய நிர்வாகத்தினரின் தகவல்கள் மற்றும் வேண்டுகோள்கள் அனைத்தையும் கவனத்துடன் செவிமடுத்த ஆளுநர் செந்தில் தொண்டமான், "வருடாந்த ஆடிஅமாவாசை உற்சவத்தை மிகவும் சிறப்பாக நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளையும் செய்யுங்கள். ஏதாவது உதவி தேவைப்பட்டால் என்னிடம் கூறுங்கள். ஆலய உற்சவத்துடன் தொடர்புடைய அத்தனை திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் உதவி ஒத்தாசை நிச்சயமாக உங்களுக்குக் கிடைக்கும். இந்திய உதவியோடு இந்த ஆலயம் மேலும் புதுப்பொலிவு பெறும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

அதாவது தமிழ்நாட்டில் தற்போது வாழ்கின்ற சோழர்களின் வம்சத்தினரின் உதவி மற்றும் ஆலோசனையைப் பெற்று இந்த ஆலயத்தைப் புனரமைக்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கு உள்ளது. ஆடிஅமாவாசை உற்சவகாலத்தில் நானும் ஒருநாள் அங்கு இறை தரிசனத்துக்காக வருகை தருவேன். உங்களைச் சந்தித்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது" என்று செந்தில் தொண்டமான் ஆலய நிர்வாகத்தினரிடம் தெரிவித்தார்.

இறுதியில் ஆலய பரிபாலன சபையினரின் சார்பில் அதன் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் ஆளுநருக்கு பாராட்டுத் தெரிவித்தார். "வரலாற்றில் முதல் தடவையாக செயற்திறன் மிக்க தமிழ் மகனொருவர் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமை எமக்கு பெரு மகிழ்ச்சி தருகின்றது. தங்களது காத்திரமான, அர்ப்பணிப்பான பணிகளுக்கு எமது நன்றிகள் வாழ்த்துகள்" என்று கூறியது மாத்திரமன்றி, ஆளுநருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

(காரைதீவு குறூப் நிருபர்)



# சவூதியின் தொழில்திறன் சரிபார்ப்பு திட்டம் இலங்கையிலும் அறிமுகம்

KINGDOM OF SAUDI ARABIA

இலங்கையில் இருந்து சவூதி அரேபியாவுக்கு பல இலட்சக்கணக்கான மக்கள் பணியாளர்களாக செல்கின்றார்கள். எதிர்காலத்திலும் அவர்களை வினைத்திறனுள்ளவர்களாக்கி சிறந்த தொழில்களுக்கு பணியாளர்களாக அமர்த்துவதற்கு இத்திட்டம் பெரிதும் உதவுகின்றது. இருநாடுகளும் நன்மை அடையும் விதத்தில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

SVP (Skills verification program) எனும் தொழில்திறன் சரிபார்ப்புத் திட்டத்தை சவூதி அரேபியா பல வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தியது. அந்த நாட்டின் 2030 நோக்கங்களை நிறைவு செய்வதற்கான திட்டங்களில் இதுவும் ஒரு திட்டமாகும். சிறந்த பணியாளர்களை தெரிவு செய்து, அவர்களின் திறன்களை சரிபார்ப்பதற்கு சவூதி அரேபிய, மனிதவள மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சினால் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.


சவூதி தொழிலாளர் சந்தையில் தொழில் முறை, மனிதவளத்தின் தரத்தை மேம்படுத்துதல், மற்றும் தொழில்முறை மட்டத்தை உயர்த்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு 23 சிறப்பு பயிற்சிகளில் முதல் கட்டமாக ஐந்து பயிற்சிகளில் தொழிலாளர்களின் திறன்களை சரிபார்ப்பதற்காக முதல் கட்டமாக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. *plumbing, electricians, air conditioners, automobile macanic automobile electricians* ஆகிய துறைகளில் திறன் சரிபார்ப்பு திட்டத்தை இலங்கையிலும் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் ஏற்கனவே பாகிஸ்தான் இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் 2021 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. முதல் கட்டம் சவூதி அரேபியாவில் உள்ள பணியாளர்களின் திறன்களை ஆராயும் திட்டம். இரண்டாவது கட்டமாக அங்கு தொழிலுக்கு செல்வதற்கு முன் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு தேர்வின் மூலம் அவர்களைத் தரப்படுத்தி தெரிவு செய்யும் திட்டம்.



இத்திட்டம் இம்மாதம் நடுப்பகுதியில் இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் திறன் மிக்க தொழிலாளர்களை உருவாக்கி அவர்களுக்கு சவூதி அரேபியா தொழில்களை வழங்கும். இலங்கையில் இருந்து சவூதி அரேபியாவுக்கு பல இலட்சக்கணக்கான மக்கள் பணியாளர்களாக செல்லுகின்றார்கள். இனிவரும் காலங்களில் இன்னும் அவர்களை தரப்படுத்தி சிறந்த தொழில்களுக்கு பணியாளர்களாக அமர்த்துவதற்கு இத்திட்டம் பெரிதும் உதவுகின்றது. இரு நாடுகளும் நன்மை அடையும் விதத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. உண்மையில் திறமையற்றவர்களை அப்படியே விட்டு விடாமல் அவர்களின் திறன்களை சரிபார்த்து அவர்களை தரப்படுத்தி தொழில்களுக்கு அமர்த்தும் சவுதி அரேபியாவின் இத்திட்டம் பாராட்டத்தக்கது.

இலங்கை எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அதிகமான இளைஞர்கள் மேற்கு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்கின்றனர். இதனால் இலங்கையும் பயனடைகிறது. சவூதி அரேபியா பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவி செய்வதில் முன்னணியில் திகழ்கிறது. சிரியா, துருக்கி பூகம்பம், சூடான் உள்நாட்டு யுத்தம் காரணமாக நிர்க்கதியான மக்களுக்கு சவூதி அரேபியா உதவியிருந்தது.

– அஷ்ஷெய்க்
பௌசுல் அலவி (மதனி)
செயலாளர்
தாருல் ஈமான் நிறுவனம்



# இ. தொ.காங்கிரஸின் வெற்றிகரமான 85 ஆவது வருட பயணம் ஆரம்பம்!

## இ.தொ.கா மலையகத்துக்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் பணியாற்றும்

### தலைவர் செந்தில் தொண்டமான்



அமரர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரின் ஆசியுடன் அவர்களது பாதையில் பயணித்து மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சமரசமின்றி தொடர்ந்து பணியாற்றும் என இ.தொ.காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 84 வருடங்களை பூர்த்தி செய்து 85வது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது.

இ.தொ.கா மலையகத்துக்காக பாரிய சேவைகளை செய்துள்ளது. பிரஜா உரிமை அற்ற சமூகமாக இருந்த மலையக மக்களும் பிரஜா உரிமை பெற்றுக் கொடுத்து, மலையக மக்களுக்கு சம உரிமையை பெற்றுக் கொடுத்தமை, உரிமைகள், அபிவிருத்தி போன்ற பல விடயங்களை மலையகத்தில் முன்னெடுத்தமை என இதொகாவின் சேவைகள் எண்ணிலடங்காதவை.

மேலும், ஆண், பெண் இருபாலருக்கும் சமமான சம்பளம், தோட்டப்புறங்களுக்கான அபிவிருத்தி, பாடசாலை மற்றும் வைத்தியசாலைகள் நிர்மாணிக்கப்பட்டமை, ஆசிரியர் நியமனங்களை பெற்றுக்கொடுத்தமை என இ.தொ.கா மலையக மக்களுக்கு பரந்துபட்ட சேவையை ஆற்றியுள்ளது.

1987ஆம் ஆண்டு முதல் முதலில் மலையகத்தில் தனிவீடுகள் அமைக்கும் பணியை இ.தொ.கா ஆரம்பித்து வைத்ததுடன், கல்வி மற்றும் சுகாதார அபிவிருத்திகளையும் முன்னெடுத்துள்ளது.

இந்த வேலைத்திட்டங்கள் மலையகத்தில் முழுமையாக வெற்றியடைய இ.தொ.கா தொடர்ந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றும். தேசிய நீரோட்டத்தில் மலையக மக்களையும் இணைத்து முழுமையான அபிவிருத்தியுடன் முன்னோக்கி கொண்டு செல்ல அமரர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் பாடுபட்டனர்.

அவர்கள் காட்டிய வழியில் இ.தொ.கா முன்னின்று செயற்படும் என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## மலைச்சாரல்

### சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தில் விசேட தேவையுடையோருக்கான பிரத்தியேக வீதி



**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தில் விசேட தேவையுடையோருக்கென புதிதாக அமைக்கப்பட்ட வீதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

சமன் தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே விகார ஜயசுந்தரவின் வேண்டுகோளுக்கிணங்க இரத்தினபுரி லயன்ஸ் கிளப்பின் அனுசரனையில் இலங்கை இராணுவத்தினரின் பங்களிப்புடன் இவ்வீதி அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மத குருமார்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு ஜனாதிபதி செயலக பணிக்குழாமின் தலைவரும் ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பான ஆலோசகருமான சாகல ரட்நாயக்க , இராணுவ தளபதி விக்கும் லியனகே, இரத்தினபுரி லயன்ஸ் கிளப்பின் தலைவர் டி.எம். பமல் ருவான்சிறி உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

### தேயிலை தொழிற்சாலையில் தீ

## 5 லொறிகள் உட்பட கட்டடம் எரிந்து நாசம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி, லெல்லுபிட்டி, வெலிமலுவ பிரதேசத்திலுள்ள தேயிலை தொழிற்சாலையொன்றில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக பிரதான கட்டடமும் ஐந்து லொறிகளும் எரிந்து நாசமாகியுள்ளன.

தொழிற்சாலை முழுவதும் தீ பரவியுள்ளதுடன் பிரதான கட்டடமும் ஐந்து லொறிகளும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

தனியார் ஒருவருக்கு சொந்தமான தொழிற்சாலையிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை, மின்சாரக் கோளாறா அல்லது சதி முயற்சிகளா என அறிய பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வீடொன்றில் பணிப்பெண்ணாக வேலை செய்த சிறுமி சடலமாக மீட்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு பகுதியிலுள்ள வீடொன்றில் பணிப்பெண்ணாகவிருந்த சிறுமியொருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார்.

சிறுமி பணிப்பெண்ணாக வேலை செய்த வீட்டின் உரிமையாளர்கள் சிறுமிக்கு பல கட்டுப்பாடுகளை விதித்து, சிறுமியை மனரீதியான துன்புறுத்தல்களுக்குள்ளாக்கி வந்ததாக உயிரிழந்த சிறுமியின் உறவினர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

சடலமாக மீட்கப்பட்ட சிறுமி, வட்டுக்கோட்டை முதலி கோவிலடியைச் சேர்ந்த 17 வயதுடைய கேதீஸ்வரன் தர்மிகா என தெரியவருகின்றது.

சிறுமி கடந்த நான்கு மாதகாலமாக பணிப்பெண்ணாக வேலை செய்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



குடும்ப வறுமை காரணமாக பணிப்பெண்ணாக வேலைக்கு வந்ததாக தெரியவருகின்றது.

வேலைக்கு வந்த சிறுமியை வெளிநபர்கள் வந்து பார்க்கக் கூடாது எனவும் சிறுமியின் வீட்டாருடன் சிறுமி மாதத்தில் ஒரு நாளில் ஒரு சில நிமிடங்கள் மாத்திரமே தொலைபேசியில் உரையாட அனுமதித்ததாக உறவினர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

அத்துடன் சிறுமிக்கு அளவுக்கதிகமான வேலையையும் கொடுத்துள்ளனர். அதனால் சிறுமி கடுமையான வேலைப் பளு மற்றும் மன அழுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டிருந்ததாக சிறுமியின் உறவினர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள யாழ்ப்பாண பொலிஸார், சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

## வடக்கின் உதயம்

### சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கைவிரல் அடையாளம் வைக்கும் இயந்திரத்தில் பழுது

**யாழ்.விசேட நிருபர்**

கடவுச்சீட்டு பெறுவதற்காக கைவிரல் அடையாளம் வைக்கும் இயந்திரம் (Fingerprint machine) பழுதடைந்துள்ளமையால் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

ஒன்லைன் மூலம் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்பவர்கள், கைவிரல் அடையாளம் வைப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில், சாவகச்சேரி பிரதேச செயலகம் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகத்திலேயே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் சாவகச்சேரி பிரதேச செயலகத்திலுள்ள இயந்திரம் கடந்த இருவார காலமாக பழுதடைந்துள்ளது. அதனால் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கைவிரல் அடையாளம் வைக்க முடியாத நிலையில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் போது, எந்த பிரதேச செயலகத்தில் கைவிரல் அடையாளம் வைக்க விரும்புகிறோம் என்பதனை தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறு தெரிவு செய்யும் பிரதேச செயலகத்திற்கு கைவிரல் அடையாளம் வைக்க வருமாறு எமது தொலைபேசிக்கு குறுந்தகவல் கிடைக்கப்பெறும். அதன் பின்னர் அந்த பிரதேச செயலகத்திற்கு சென்று எமது கைவிரல் அடையாளத்தை வைக்க முடியும்.

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் இயந்திரம் பழுதடைந்துள்ள விடயத்தை அதிகாரிகள் ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்தாமையால் சாவகச்சேரி பிரதேச செயலகத்தை தெரிவு செய்த பலரையும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். அதிகாரிகள் ஊடகங்கள் ஊடாக அறிவித்திருந்தால், நாம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தை தெரிவு செய்து இருப்போம்.

தற்போது இயந்திரம் எப்போது சீராகும் என வினவினால் , கொழும்பிலிருந்து தொழில்நுட்பவியலாளர்கள் வர வேண்டும். எப்ப சீராகும் என தெரியாது என பொறுப்பற்ற வகையில் பதில் அளிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இயந்திரம் பழுதடைந்த விடயத்தை ஊடகங்களில் அறிவித்திருந்தால், நாம் வீணாக அலைக்கழிய வேண்டிய தேவை இல்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.



தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவர் அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் வடமராட்சி கரவெட்டியில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு சிவசிதம்பரத்தின் குடும்பத்தினர் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியை கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் உபாலி பொன்னம்பலமும் ஓய்வுபெற்ற அதிபர் இ. இராகவனும் கௌரவிப்பதையும் சிவசிதம்பரத்தின் மகள் கலாநிதி நிரஞ்சலி தேவராஜ், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் வீ.ரி. தமிழ்மாறன், யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் கு. மிகுந்தன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் கரவெட்டி தினகரன் நிருபர்)



நீர்வேலி வாய்க்கால் தரவை மூத்த விநாயகர் ஆலய குரு பிரம்ம ஸ்ரீ சோமசுந்தர குருக்கள் பிச்க்ஷாடன குருக்களின் ஆச்சாரிய அபிஷேகம் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரம்; உண்மையை கண்டறிய வடக்கு, கிழக்கில் ஹர்த்தால்

**யாழ். விசேட நிருபர்**

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விடயத்தில் உண்மை நிலைமையை கண்டறியக் கோரி வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் எதிர்வரும் சனிக்கிழமை பூரண ஹர்த்தாலை மேற்கொள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. யாழ்.ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற விசேட ஊடகச் சந்திப்பில் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் வட்டுவாகல் பாலத்தில் ஆரம்பித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை நோக்கி பேரணியொன்றும் மேற்கொள்ளப்படவுள்ளது. ஹர்த்தாலுக்கு அனைத்து தரப்பினரும் அரசியல் கட்சிகளும் எவ்வித பேதமுமின்றி ஆதரவளிக்க வேண்டும். அன்றையதினம் சனிக்கிழமை விடுமுறை என்பதால் வர்த்தகர்கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என அனைத்து தரப்பினரும் ஆதரவளிப்பதுடன் முல்லைத்தீவில் நடைபெறவுள்ள போராட்டத்திலும் பங்கேற்கவேண்டும் என அழைப்பு விடுத்துள்ளனர்.




# தாய்ப்பால் புரைக்கேறியதில் 9 மாதக்குழந்தை உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் நெடுந்தீவு பிரதேசத்தில் நேற்று காலை 9 மாதங்களேயான குழந்தையொன்று தாய்ப்பால் புரைக்கேறி உயிரிழந்துள்ளது. பெற்றோர் குழந்தையை நெடுந்தீவு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும், குழந்தை உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

உயிரிழந்த குழந்தையின் சடலத்துடன் நோயாளர் காவு வண்டியில் வந்த இளம் தாயை பல மணிநேரம் நோயாளர் காவு வண்டியில் காக்க வைத்திருந்ததாக யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

குழந்தையின் சடலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு பெற்றோர் வைத்தியசாலையில் கோரிய போது, யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியின் ஆலோசனையை பெற்றே சடலத்தை கையளிக்கலாம் என நெடுந்தீவு வைத்தியசாலையில் கூறியுள்ளனர்.

சட்ட வைத்திய அதிகாரியை நெடுந்தீவு வைத்தியர் தொடர்பு கொண்டு கேட்ட போது , குழந்தையின் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும், சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பணித்துள்ளார்.

அதனையடுத்து குழந்தையின் தாயிடம், குழந்தையின் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கூறி அனுப்பி வைத்துள்ளனர்

தாய் , தனது குழந்தையின் சடலத்துடன் , நெடுந்தீவிலிருந்து படகில் குறிகாட்டுவான் பகுதிக்கு வந்து, அங்கிருந்து வேலணை வைத்தியசாலை நோயாளர் காவு வண்டிக்கு அறிவித்து, அதில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில், நோயாளர் காவு வண்டியில் எவ்வாறு சடலத்தை ஏற்ற முடியுமென கேள்வி எழுப்பி தாயை நோயாளர் காவு வண்டியிலிருந்து இறங்க விடாமல் பல மணிநேரம் குழந்தையின் சடலத்துடன் காக்க வைத்துள்ளனர்.

நீண்ட இழுபறியின் பின்னர் தாயை நோயாளர் காவு வண்டியிலிருந்து இறங்க அனுமதித்து , குழந்தையின் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்காக பிரேத அறையில் ஒப்படைக்க அனுமதித்துள்ளனர்.

குழந்தையின் சடலத்துடன் தாயை நீண்ட நேரம் நோயாளர் காவு வண்டியினுள் காக்க வைத்தமை தொடர்பில் பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

# கிழக்கின் குரல்



# சுத்திகரிப்பு தொழிலாளர்களின் வதிவிட உரிமையை உறுதிப்படுத்த வேண்டும்

## ஒருங்கிணைப்பு கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

(ஏறாவூர் சுழற்சி நிருபர்)



ஏறாவூர் நகர சபையின் கீழ் கடமையாற்றும், சுத்திகரிப்பு தொழிலாளர்கள் நீண்ட காலமாக தங்கியிருக்கும் காணிக்கு, ஏறாவூர் நகர சபை ஆவணங்களை வழங்க நடவடிக்கை எடுத்து வருவதையிட்டு, சந்தோஷமடைவதாக வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் திங்கட்கிழமை (24) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இது தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

1944ஆம் ஆண்டுக்கு முன்பிலிருந்து ஏறாவூர் நகர சபை எல்லைக்குள் சுத்திகரிப்பு கடமையினை மேற்கொண்டு வருகின்ற இவர்கள், ஏறாவூர் நகர சபைக்கு சொந்தமான ஏறாவூர் 05ஆம் குறிச்சி பகுதியில் லயன் வீட்டுத் திட்டங்கள் சில அமைக்கப்பட்டு குடியமர்த்தப் பட்டனர்.

ஆனால் இவர்களுக்கு இதுவரையில் அவ்வசிப்பிடத்திற்கான ஆவணங்கள் சட்டரீதியாக ஏறாவூர் நகர சபையினால் வழங்கப்படவில்லை. ஆனால் மாவட்டத்தின் ஏனைய உள்ளூராட்சி மன்ற பகுதிகளில் இவ்வாறு குடியமர்த்தப்பட்டவர்களுக்கு அதற்கான ஆவணங்கள் கடந்த காலங்களில் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்மானின் கவனத்திற்கு கொண்டு சென்றதுக்கிணங்க, ஆளுநரின் உத்தரவுக்கமைவாக உள்ளூராட்சித் திணைக்களம் இது விடயத்தில் உடன் செயற்பட்டு, ஆவணங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையிட்டு ஆளுநர் உட்பட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் மற்றும் ஜனார்த்தனன் ஆகியோருடன் திணைக்களத் தலைவர்கள் உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர்.



காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தின் பாற்குடபவனி திங்கட்கிழமை (24) மிகவும் சிறப்பாக இடம்பெற்ற போது... (படம்: காரைதீவு குறூப் நிருபர்)

# அரசாங்க அதிபரால் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கி வைப்பு



(பெரியநீலாவணை விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் நீண்ட காலமாக காணி ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு, காணி உறுதிப் பத்திரங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன் தலைமையில் வெள்ளிக்கிழமை (21) பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு, காணி உறுதிப்பத்திரங்களை வழங்கி வைத்தார்.

இதன்போது, பொதுமக்கள் அரசாங்கத்தால் வழங்கப்படும் காணி ஆவணங்களை எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பாகவும் பயனாளிகளுக்கு இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், கணக்காளர் றிஸ்வி யஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராசா, நிருவாக உத்தியோகத்தர் கே.யோகஸ்வரன், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எஸ். சிவம் உட்பட கிராம மட்டத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## நலன்புரி பெறுவோருக்கு கடிதங்கள்

கிண்ணியா தினகரன் நிருபர்

நலன்புரி நன்மைகள் பெறுபவர்களுக்கான கடிதங்கள் கிண்ணியா பிரதேச செயலகத்தில், பிரதேச செயலாளர் எம்.எச். கனி தலைமையில் சனிக்கிழமை (22) வழங்கப்பட்டன.

நலன்புரி நன்மைகளை பெற தகுதியான குடும்பங்களுக்கான வங்கிக் கணக்கு திறப்பதற்கு அரசினால் தெரிவு செய்யப்பட்ட, ஆன்லைன் மூலம் கிடைக்கப் பெற்ற தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே வங்கிக் கணக்கு திறப்பதற்கான கடிதங்கள், கிண்ணியா பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் வாரியாக வழங்கப்பட்டன.

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும் இலக்கிய விழிப்புணர்வு கருத்தரங்கு, அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முசாபீர் தலைமையில் வெள்ளிக்கிழமை (21) நடத்தப்பட்டது.

விசேட அதிதியாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் டி. எம். ரின்சான், கலாசார உத்தியோகத்தர்கள் எம். எஸ். ஜாஃபர், எம். எஸ். ராஜயா, ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வளவாளராக ஒலுவிலைச் சேர்ந்த ஆசிரியர் ஜெ. வாகாப்தீன் கலந்து சிறப்பித்தார்.

## உர மானிய வவுச்சர் வழங்குமாறு கோரிக்கை

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அட்டாளைச்சேனை கமநல சேவை அபிவிருத்திப் பிரிவிலுள்ள கணையாங்குழி கிழல்கண்ட விவசாயிகளுக்கு, இம்முறை அரசினால் சிறுபோக விவசாயிகளுக்கு வழங்கப்படும் உர மானிய பண வவுச்சர் இன்னும் விநியோகிக்கப் படவில்லை.

இது குறித்து கவலை தெரிவிக்கும் விவசாயிகள், உரக் கொள்வனவிற்கான பண வவுச்சரினை மேலும் தாமதியாது விநியோகிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

சிறுபோக விவசாயிகளுக்கு அரசினால் இரசாயன உரக் கொள்வனவுக்கு ஏக்கரொன்றுக்கு ரூபா 08 ஆயிரம் பெறுமதியான வவுச்சர்கள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ள போதிலும், அட்டாளைச்சேனை கணையாங்குழி கிழல்கண்ட விவசாயிகளுக்கு இது இன்னும் வழங்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி, உரக் கொள்வனவிற்கான பண வவுச்சர் கிடைப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றனர்.

# தைபா அரபுக் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழா

(கல்முனை விசேட நிருபர்)

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழா நாளை புதன்கிழமை (26) சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா மதனி தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டை சேர்ந்த கொடைவள்ளல் ஐயூப் அஸ்ஸர் ஊனி பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார். இதன் போது காத்தான்குடி ஜாமியா சித்தீக்கியா அரபுக் கல்லூரி முதல்வர் மௌலவி எம்.ஐ.அப்துல் கபூர் மதனி, பட்டமளிப்பு பிரசங்கத்தை நிகழ்த்தவுள்ளார்.

இப்பட்டமளிப்பு விழாவில் 04 தொகுதிகளைச் சேர்ந்த 31 மாணவிகள், மௌலவியா பட்டத்தை பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

அத்துடன் இவர்களுள் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கல்விக் கல்லூரி என்பவற்றுக்கு அனுமதி பெற்று, உயர் கல்வி கற்கும் 19 மாணவிகள், விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும், கல்லூரி மட்ட பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவிகள் பலர், பரிசு வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

விழாவை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளதாக விழா ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

## இஸ்லாமாபாத் பாடசாலைக்கு நூல்கள் அன்பளிப்பு

(கல்முனை விசேட, சாய்ந்தமருது விசேட நிருபர்கள்)



முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சிச் செயல் முன்னணியினால் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்திற்கு ஒரு தொகை நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

இந்நூல்களில் ஒரு பகுதி பாடசாலை நூலகத்திற்கும் மற்றொரு பகுதி பாடசாலையின் ஒரு பிரிவான கிறின்வீச் ஆங்கில பாலர் பாடசாலைக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ஆங்கில பாலர் பாடசாலைக்கான நூல்களை அதன் நிறைவேற்றுப் பணிப்பாளரான ஏ.ஆர்.ஜூபிரிடம் பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத் வழங்கி வைத்தார்.

பெறுமதியான இந்நூல்களை அன்பளிப்பு செய்தமைக்காக முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணிக்கு இதன்போது நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

# இராணுவத்தினரால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)



பௌத்த விகாரைகள் மற்றும் சீனாவின் பௌத்த மக்களால் இலங்கையிலுள்ள ஏழை மக்களுக்கு, உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு, அக்கரைப்பற்று ஸ்ரீ விஜயராம பௌத்த விகாரையில் அண்மையில் நடைபெற்றது.

இராணுவப்படையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந் நிகழ்வு, அக்கரைபற்று பௌத்த விகாரையின் பிரதம பீடாதிபதி வண. தேவகொட சோரத தேரோ தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில், இராணுவப்படையின் இருபத்தினான்காவது காலாட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி, மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி பிரதம அதிதியாக கலந்து கொண்டு, அக்கரைப்பற்று பிரதேசத்தில் வறுமை கோட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தார்.

241 பிரிகேடின் இராணுவ கட்டளை அதிகாரி கேர்னல் தம்மிக்க பத்திரத்ன உட்பட, இராணுவப் பிரிவின் பல உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில், பௌத்த விகாரைகள் மற்றும் சீனாவின் பௌத்த மக்களுடன் தொடர்புகொண்டு இவ்வுதவியை நடைமுறைப்படுத்துவதற்கு உதவிய நிசாந்த விதாரண, உதய கருணாரத்ன ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர்.



அக்கரைப்பற்று வலய மட்ட தமிழ் மொழித்தினப் போட்டி ஞாயிற்றுக்கிழமை (23) அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றகமத்துல்லாஹ், நடுவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதை படத்தில் காணலாம். (படம்: பலமுனை தினகரன் நிருபர்)

## பாடசாலைக்கு மின் உபகரணங்கள் கையளிப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் கல்வி வலயத்திற்குட்பட்ட ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்திற்கு எம். ரியால் என்பவரால், சிசிடிவி கெமராவுக்கு தேவையான மின் உபகரணங்கள் ஞாயிற்றுக்கிழமை (23) கையளிக்கப்பட்டது.

கந்தளாய் ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்திற்கு மிக நீண்ட கால குறைபாடாக காணப்பட்ட, சிசிடிவி கெமரா இணைப்பு உபகரணங்கள் தனவந்தர் எம். ரியாலினால், அதிபர் சாஹிதீடம் அண்மையில் வழங்கப்பட்டது.



இறக்காமம் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி பிரிவினால் கலாசார மற்றும் இலக்கியப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இப் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரி மாணவர்களுக்கு திங்கட்கிழமை (24) சான்றிதழ், கௌரவிப்பு என்பன கல்லூரி அதிபர் எம். ஏ. எம். பஜீர் தலைமையில் நடைபெற்ற போது. (படம்: அம்பாறை விசேட நிருபர்)

# சீரான உணவுப் பழக்கம் இன்மையே தொற்றா நோய் ஏற்படக் காரணம்

(ஒலுவில் விசேட நிருபர்)

சீரான உணவுப் பழக்க வழக்கம் இன்மையால் இலங்கையில் 75 சதவீதமான மக்கள் தொற்றா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார். கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட உணவக உரிமையாளர்களுடனான உணவகங்களை மேம்படுத்தி சுகாதாரமான உணவை வழங்கும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை (21) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

பணிமனையின் சுற்றுச்சூழல் மற்றும் தொழில் சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம் பௌசாத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள விசேட அறிவுறுத்தலுக்கமைய ஒருங்கிணைந்த சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றது.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகாரசட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய வேண்டுமெனவும், உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றினை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் கையுறை பாவிக்க வேண்டுமென்றார்.

# மாணவர்களுக்கு களம் கொடுக்கும் கல்லூரி நட்சத்திரங்கள் நிகழ்வு

தெற்காசியாவின் முதல் வானொலியான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம், ஒலிபரப்பாளர்கள் உட்பட பல புகழ்பெற்ற கலைஞர்களை உருவாக்கி இருக்கிறது .

அந்த வரிசையில் பாடசாலை மட்டத்தில் பாடும் திறமையுள்ள மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களை நிகழ்ச்சியில் பங்குகொள்ளச் செய்யும் விதமாக புதிய நிகழ்ச்சி ஒன்றையும் இந்நிறுவனம்

தமிழில் அறிமுகஞ் செய்துள்ளது.கல்லூரி நட்சத்திரங்கள் என்ற பெயரில் இந்நிகழ்வு மாதாந்தம் குறிப்பிட்ட பாடசாலையிலிருந்து நேரடியாக ஒலிபரப்பாகவிருக்கிறது.

இந்நிகழ்ச்சியின் முதல் நேரடி ஒலிபரப்பு 2023 ஜூலை 26 கொழும்பு பம்பலபிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும். இந்நேரடி ஒலிப்பரப்பில் கொழும்பு ராமநாதன் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கஜினிக்கா ராகுலன், ரிமாக்ஷி சேகர், ஆதிரா சிவகுமார் நிலுக்ஷாயிணி லோகநாதன் ஆகிய மாணவிகள் பங்கு கொள்கின்றனர்.

மாதந்தோறும் நேரலையாக ஒலுபரப்பாகவுள்ள இந் நிகழ்ச்சியில் பங்கு பெற்ற விரும்பும் பாடசாலைகள் அதிபர் மூலமாக தொடர்பு கொள்ளலாம்.

புதன்கிழமை (26) 12 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்ச்சியை 104.7 மற்றும் 104.9 ஆகிய தென்றல் வரிசைகளில் நேரடியாக கேட்டு மகிழலாம்.

இந்நிகழ்வு இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத் தாபன ஆலோசகர் இலக்கிய புரவலர் ஹாஸிம் ஓமர் முன்னிலையில் நடைபெறும்.

நிகழ்ச்சி தயாரிப்பாளராக நிஷாந்தி ரணத்துங்க பங்கேற்கிறார்.

# ரிஹானா அன்வர்ஷா இஷாக்கின் இலட்சியம் சிறுகதை நூல் வெளியீட்டு விழா

கத்தாரில் இயங்கும் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் அனுசரணையில் ரிஹானா அன்வர்ஷா இஷாக் எழுதிய இலட்சியம் (ஒரு தந்தையின் சபதம்) சிறுகதை நூல் வெளியீட்டு விழா, அண்மையில் கம்பளை சாஹிரா கல்லூரி மஹ்மூத் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு கல்வி இராஜாங்க அமைச்சின் ஊடக செயலாளர் எம். ஆர். ஹஷிம்தீன் பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதிகளாக கலாபூஷணம் இலக்கியத் தாரகை நயீமா சித்தீக், ஆசிரியர் மா. கோகுலதீபன், கண்டி கார் டிரேடிங் உரிமையாளர் இப்திகார் அலி, வழக்கறிஞர் பிரசித்த நொத்தாரிஸ், எம். டி. நிஹால் அகமட், ஸ்கை தமிழ் ஊடகத்தின் பிராந்திய முகாமையாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் இணை ஆசிரியருமான ஷிஹானா நௌபர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

முதல் பிரதி நூலாசிரியரின் தாயார் ஆயிஷா உம்மா அன்வர்ஷாவுக்கு வழங்கப்பட்டது. நூலாசிரியர் அறிமுகத்தை கலாபூஷணம் நயீமா சித்தீக் நிகழ்த்த, நூலின் நயவுரையை ஆசிரியர் மா. கோகுல தீபன் வழங்கினார்.

# சிங்கப்பூர் கடவுச்சீட்டுக்கு உலகத்தர அங்கீகாரம்

## ஜெர்மனி இரண்டாம் இடம், 80ஆவது இடத்தில் இந்தியா

கடவுச்சீட்டு பெறாமல் அதிகமான நாடுகளுக்கு செல்லக்கூடிய உலகின் சிறந்த கடவுச்சீட்டாக சிங்கப்பூர் கடவுச்சீட்டு அங்கீகாரம் பெற்றுள்ளது. இதில்,ஐந்து ஆண்டுகளாக முதல் இடத்தை வகித்து வந்த ஜப்பான் மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

லண்டனைத் தளமாகக் கொண்ட குடியகல்வு ஆலோசனை நிறுவனமான ஹென்லி, வெளியிட்டுள்ள புதிய அட்டவணையிலே இது குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் 192 நாடுகளுக்கு விசா பெறாமல் பயணிக்கக்கூடிய கடவுச்சீட்டு என்ற சிறப்பை சிங்கப்பூர் கடவுச் சீட்டு கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. உலகின் 190 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்க முடியும் என்ற வகையில் ஜெர்மனி இரண்டாம் இடத்தையும், ஜப்பான் மூன்றாம் இடத்தையும், பிரிட்டன் நான்காம் இடத்தையும் பெற்றுள்ளன. பத்தாண்டுகளுக்கு முன்னர் முதலிடம் வகித்த அமெரிக்கா தற்போது எட்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் 85ஆவது இடத்தை வகித்த இந்தியா, தற்போது ஐந்து இடங்களுக்கு முன்னேறி 80ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்திய கடவுச்சீட்டைப் பயன்படுத்தி தற்போது 57 நாடுகளுக்கு விசா பெறாமல் செல்ல முடியும். சீனா, ஜப்பான், ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு முன்கூட்டியே விசா பெறாமல் இந்தியர்கள் பயணிக்க முடியாது. அதே சமயம் இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து, ருவாண்டா ஆகிய நாடுகள் உட்பட 57 நாடுகளுக்கு விசா பெறாமலும், சென்றடைந்த பின்னர் விசா பெறுதல் வசதியையும் இந்திய பயணிகள் கொண்டுள்ளனர்.

# நீர்க்கொடிகள், வண்டல்களை உரமாக மாற்றும் திட்டம்

## காஷ்மீர் விவசாயிகள் மகிழ்ச்சி

காஷ்மீரின் உலகப்புகழ்பெற்ற தால் ஏரியில் காணப்படும் ஆகாயத் தாமரை போன்ற நீர்க் கொடிகள், வண்டல் போன்றவற்றை சேகரித்து இயற்கை பசளை தயாரிக்கும் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

தால் ஏரியிலிருந்து வருடமொன்றுக்கு எழுபதாயிரம் தொன் தாவர வண்டல்களை சேகரிக்க முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.இதையடுத்தே உரத் தொழிற்சாலை அமைக்கப்பட்டதாகவும் ஓகஸ்ட் மாதம் முதல் இத்தொழிற்சாலை இயங்கவுள்ளது. வருடத்துக்கு 24 ஆயிரம் தொன் இயற்கை பசளையை இத்தொழிற்சாலை உற்பத்தி செய்யுமென உற்பத்தி நிறுவனத்தின் தலைவர் மனிந்தர்சிங் நய்யார் தெரிவித்துள்ளார்.

தற்போது உத்தர பிரதேசம் மற்றும் ஹரியானா போன்ற தூர மாநிலங்களில் இருந்தே காஷ்மீருக்கு பசளைகள் வரவழைக்கப்படுகின்றன.

இதனால், விவசாயிகள் அதிக விலை கொடுத்து பசளையை வாங்குகின்றனர். இத்திட்டம் அமுலாகினால், பசுமைப் பசளையை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனால் தாவரக் கழிவுகளை சேகரிப்போருக்கு வருமானம் கிடைக்கும். கரையோரங்களில் மலையென குவிக்கப்பட்டிருந்த வண்டல்கள் உரமாகும் மற்றும் தால் ஏரி ரம்மியமாகத் தோன்றும் என்றும் நய்யார் மேலும் ஊடகங்களுக்கு தகவல் கூறியிருந்தார்.

காஷ்மீர் விவசாயிகளின் செலவுகளைக் குறைக்கும் நோக்கில் அறிமுகமாகியுள்ள இத்திட்டம் பலரது வரவேற்பையும் பெற்றுள்ளது. இதுபோன்று செயற்கை கழிவுகள் மற்றும் குப்பை கூளங்களையும் பசளையாக மாற்றும் திட்டம் குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது.

இரசாயனப் பசளைகளின் பயன்பாட்டைக் குறைத்து சேதனைப் பசளைகளின் பயன்பாடுகள் இந்தியாவில் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.


## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

101 சொகுசு வாகனங்கள் விற்பனைக்கு

KL-7350 BMW, 2007, car அதியுயர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி , இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071 4 5 4 295 8 . 045668

107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

KM-8369 Toyota, 2007, car அதியுயர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 045662

117 வேன்கள் விற்பனைக்கு

53-0457 Toyota, 1987, van அதியுயர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 045664

119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

KM-8814 Toyota Belta, 2007, car அதியுய ர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 045667

PX-5329 Mahindra Bolero 2014 maxi Truck, அதியுயர் விலைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 045665

122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

AAG-4681 Bajaj, 2013, AAS-9388 Bajaj, 2014, threewhee l அதியுயர் விலை க்கு. வெலி பல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1121081 0 . 045663

QR -6363 Bajaj, 2008, GY -5418 Bajaj, 20 02, threewhe el அ தியுயர் விலைக்கு. வெலி பல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 0599916 3 . 045670

### வேலைவாய்ப்பு

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

ஹோமாகம வேலைத்தளத்திற்கு ஆண் தங்கியிருந்து சுத்திகரிப்பதற்கு கவனித்துக் கொள்வதற்கு தேவை. சிங்களம் கதைக்கக் கூடியவா'கள். 0755492492, 0777886551. 045736




Repeat Your Ad For Better Offers

The Housewives' companion Classifieds on Daily News


# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## விலக்களித்தலுக்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) (திருத்தப்பட்ட) பிரிவிற்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது இத்தால் அறியச்செய்வது யாதெனில், சக்தி விநியோக அளவுக் குறைவு மற்றும் அவற்றின் வளாகங்களுள் ஓர் எல்லைக்குட்பட்ட விநியோக வலையமைப்பு காணப்படுதல் ஆகியவற்றால், குறித்துரைக்கப்பட்ட/ முறையான வளாகங்களில் மட்டும் மின்சாரத்தை விநியோகித்தல் மற்றும் வழங்கல் ஆகிய நோக்கங்களிற்காக, ஆணைக்குழு கீழ்வரும் அடையாளங்காணப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு விலக்களிக்க உத்தேசித்து உள்ளது என்பதாகும்.

| விண்ணப்ப இல | விண்ணப்பதாரர் | வளாகம் | நுகர்வோரின் இயல்பு |
|---|---|---|---|
| E/AE-D/22/26 | ஹோம்லேண்ட்ஸ் ஸ்கைலைன் (பிரைவேட்) லிமிடெட் | கேன்டர்பரி கோல்.'.ப் ரிசோர்ட் அடுக்குமாடி குடியிருப்புகள், இல.90, முக்தகந்த, கோரலைமா, கோனபல | குடியிருப்பு |
| E/AE-D/23/16 | ஆர்வெல் ரெசிடென்சி மனேஜ்மென்ட் கோர்ப்பரேஷன் சீபி இல. 4383 | இல.16, டீல் பிளேஸ், கொழும்பு 03 (ஆர்வெல் அடுக்குமாடி குடியிருப்புகள்) | குடியிருப்பு |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும்போது விண்ணப்ப இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03

திகதி: 2023.07.25

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் (திருத்தப்பட்ட) இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12(1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு பின்வரும் நபர்களுக்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை மேம்படுத்த உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | மின் நிலையம்/ வசதியின் பெயர் | இடம் | திறன் (MW) | தொழினுட்பம் |
|---|---|---|---|---|---|
| E/AL/N/23/20 | சமன் ஜல விதுலி கம்பெனி பிரைவேட்லிமிடெட் | கடவல மினிஹைட்ரோ மின் திட்டம் II | வெவல்தலாவ, கினிகத்ஹேன | 1.32 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/23/21 | பிளக் வோட்டர் பவர் (பிரைவேட்) லிமிடெட் | பிளக் வோட்டர் மினி நீரமின் நிலையம் | வெவல்தலாவ, கினிகத்ஹேன | 1.65 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும்போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03

திகதி: 2023.07.25

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

# பெறுகை அறிவித்தல்!

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.)**

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

## திவுலப்பிட்டிய/ஹொரண முன் வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ளல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திவுலப்பிட்டிய/ ஹொரண முன் வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக வழங்குநர்களிடமிருந்து திறந்த விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | வகை (SLS Standard) | அளவு | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | காசாக | வங்கிப் பிணை மூலம் |
| PRDA/WP/ PRO/2023/51 | திவுலப்பிட்டிய/ ஹொரண முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான மூலப் பொருட்களை கொள்வனவு செய்தல் | 10. மி.மி. முரக்கு உருக்குக் கம்பி | 2000 | ரூ. 2000.00 + vat + SSCL | ரூ. 100,000.00 | ரூ. 200,000.00 |
| | | 12 மி.மி. முருக்கு உருக்குக் கம்பனி | 5000 | | | |
| | | சீமெந்து (50 kg) | 3680 | | | |
| | | பைன்டிங் கம்பி (18 g) | 500 | | | |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.07.25 முதல் 2023.08.08 வரை மு. ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணத்தை செலுத்தி (அதிகார சபையின் பதிவு வழங்குநர்கள் தவிர்த்து) இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்காக கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கிப் பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிப்நதனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் 2023.08.09 பி. ப. 2.30 இற்கு முடிவடைவதுடன் கேள்விகள் திறத்தல் அன்றைய தினம் அந்த நேரத்திலேயே இவ் அலுவலகத்தில் இடம் பெறும். அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.),**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொலைபேசி இலக்கம்: 011-4849845**

# சுகாதார அமைச்சு

## மருத்துவ வழங்கல் பிரிவு

# கேள்வி அழைப்பு

சுகாதார அமைச்சிற்குரித்தான மருத்துவ வழங்கல் பிரிவின் பின்வரும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன.

02) இந்த நிர்மாணங்களுக்கான கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல. | வேலை விடயத்தின் பெயர் | கேள்விதாரரின் தரத் தகுதி | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|
| 01 | Supply and, Fabricating and Fixing of Heavy Duty Steel Racks at Second Floor, Drug Stores Building No. 02 Medical Supplies Division - IDH Angoda | EM 03 அல்லது அதற்கு மேல் | ரூபா 5,000.00 |
| 02 | Renovation of Toilet Complex at Stores Medical Supplies Division at Colombo 10. | C 06 அல்லது அதற்கு மேல் | ரூபா 4,000.00 |
| 03 | Construction of Drains and Installing Iron Grating Medical Supplies Division - Colombo 10. | C 09 அல்லது அதற்கு மேல் | ரூபா 2,500.00 |
| 04 | Construct Floor and Fixing Ladder Medical Supplies Division - Colombo 10. | C 09 அல்லது அதற்கு மேல் | ரூபா 2,500.00 |

03) இதன் பொருட்டு மருத்துவ வழங்கல் பிரிவின் நிர்வாக அலுவலகத்தினால் வழங்கப்படும் மாதிரிப் படிவத்தில் மட்டுமே விலைகளை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04) கேள்வி ஆவணங்களை 2023-07-25ஆம் திகதி முதல் 2023-08-14ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் வேண்டுகோள் கடிதமொன்றை நிர்வாக அதிகாரிக்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு குறித்த கேள்விக் கட்டணத்தை சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்து மருத்துவ வழங்கல் பிரிவின் நிர்வாக அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

05) 2023-08-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை அன்றைய தினம் அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து மருத்துவ வழங்கல் பிரிவில் அமைந்துள்ள கணக்காளர் (வழங்கல்) அலுவலகத்தின் கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

06) கேள்விப் படிவங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அதில் கேள்வியின் பெயர், திறக்கப்படும் திகதி மற்றும் நேரத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். மேலதிக விபரங்களை 011-2694113 எனும் தொலைபேசி இலக்கத்தில் மருத்துவ வழங்கல் பிரிவின் நிர்வாக அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

08) கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மருத்துவ வழங்கல் பிரிவு,**
**இல. 357, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,**
**கொழும்பு-10.**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
போக்குவரத்து மற்றும்
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# கேள்விகோரல்

| நிறைவேற்றுப் பொறியியல் பிரிவு | பாதை | நிர்மாண ஒப்பந்தம் |
|---|---|---|
| கேகாலை | பரகம்மன - திக்எல்ல - அட்டுகொட - வந்துராதெனிய வீதி (B604) | chip sealing செய்தல் |
| ருவன்வெல்ல | தெஹிஓவிட்ட - தெரணியகல - நூரி வீதி (B093) | chip sealing செய்தல் |
| | கேகாலை - புளத்கொஹுபிட்டிய - கரவனெல்ல வீதி (A02.1) | chip sealing செய்தல் |
| | யட்டியன்தொட்ட - பூனாகல - மீனாகல வீதி (B482) | chip sealing செய்தல் |
| | புளத்கொஹுபிட்டிய - தேதூகல வீதி (B067) | chip sealing செய்தல் |

மேற்படி வீதிகளில் ஒப்பந்தங்களுக்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2023 ஜூலை 25 முதல் 2023 ஒகஸ்ட் 08 வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk ஆகிய இணைய தளத்திற்கு வருகை தந்து மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**பிரதம பொறியியல் பணிமனை,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை.**
**கேகாலை - தொ. பே. - 035-2229554.**

# காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 39(1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 1977.06.03 ஆம் திகதிய 268 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1977 ஆம் ஆண்டின் 269 ஆம் இலக்க 1977.05.19 ஆந் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித்துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை ஆகையால் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 1977.06.03 ஆம் திகதிய 268 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில்

பிரசுரிக்கப்பட்ட 1977 ஆம் ஆண்டின் 269 ஆம் இலக்க 1977.05.19 ஆம் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.
எனது இல. : J/76/ P/217
பிரதேச செய. குறிப்பு இல. :அத்/17/326.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு, "மிஹிகத மெதுர", காணிச் செயலகம், இல.1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை, 2023, ஏப்ரல் 10.

**அட்டவணை**

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம், இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 543B, அத்திடிய தெற்கு கிராம அலுவலர் பிரிவில், அத்திடிய தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள

நில அளவையாளர் நாயகத்தின் இல.CO/RTM/2017/184 மற்றும் 2022.02.21 ஆந் திகதி தெளிவான வரைபடத்தில் பின்வரும் பெயர்கள், விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள்:

**01. துண்டு "A" - கிரிபெல்லகஹவத்தை - விஸ்தீரணம்: 0.0013 ஹெக்டயார்**

வடக்கு : க.தி. 521002 வலயம் 7 இல். 5 மற்றும் அத்திடிய வீதி கிழக்கு: அத்திடிய வீதி தெற்கு: இந்த வரைபடத்தில் துண்டு B மேற்கு: க.தி 521002 வலயம் 7 இல், துண்டு இல. 108 மற்றும் 5.

**02. துண்டு "B" - கிரிபெல்லகஹவத்தை - விஸ்தீரணம்: 0.0012 ஹெக்டயார்**

வடக்கு : க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல.108, 5 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு A மற்றும் அத்திய வீக் கிழக்கு:வீதி தெற்கு: இந்த வரைபடத்தில் துண்டுகள் C மற்றும் D மேற்கு: க.தி 521002 வலயம் 7 இல், துண்டு இல. 105 மற்றும் 108.

**03. துண்டு "C" - கிரிபெல்லகஹவத்தை - விஸ்தீரணம்: 0.0062 ஹெக்டயார்**

வடக்கு : க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல. 105, 108 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு B; கிழக்கு : அத்திடிய வீதி மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு F தெற்கு: இந்த வரைப்படத்தில் துண்டு F; மேற்கு: இந்த வரைபடத்தில் துண்டு D.

**04. துண்டு 'D' - கிரிபெல்லகஹவத்தை - விஸ்தீரணம்: 0.0069 ஹெக்டயார்**

வடக்கு: க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல. 108 கிழக்கு: இந்த வரைபடத்தில் துண்டுகள் B, C மற்றும் F தெற்கு: இந்த வரைபடத்தில் துண்டுகள் F மற்றும் G;மேற்கு: இந்த வரைபடத்தில் துண்டு E மற்றும் க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல. 105

**05. துண்டு. 'E' - கிரிபெல்லகஹவத்தை - விஸ்தீரணம் 0.0037 ஹெக்டயார்**

வடக்கு : இந்த வரைபடத்தில் துண்டு இல. 105 கிழக்கு: இந்த வரைபடத்தில் துண்டுகள் D மற்றும் க் தெற்கு: வீதி மேற்கு: வீதி க.தி.521002 வலயம் 7 இல், துண்டு இல. 181 மற்றும் 105.

**06. துண்டு 'F' - கிரிபெல்லகஹவத்தை - விஸ்தீரணம் 0.0030 ஹெக்டயார்**

வடக்கு: இந்த வரைபடத்தில் துண்டுகள் D,C மற்றும் அத்திடிய வீதி கிழக்கு: அத்திடிய வீதி மற்றும் வீதி தெற்கு: வீதி மேற்கு வீதி, இந்த வரைபடத்தில் துண்டுகள் E, D மற்றும் C.

**07. துண்டு 'J' - கிரிபெல்லகஹவத்தை - விஸ்தீரணம்: 0.0076 ஹெக்டயார்**

வடக்கு : வீதி மற்றும் அத்திடிய வீதி கிழக்கு: அத்திடிய வீதி தெற்கு: இந்த வரைபடத்தில் துண்டு K, க.தி. 521203 வலயம் 2 இல், துண்டு இல. 173 மற்றும் 113 மேற்கு: க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல. 113 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு L மற்றும் வீதி.

**08. துண்டு 'K - கிரிபெல்லகஹவத்தை - விஸ்தீரணம்: 0.0023 ஹெக்டயார்**

வடக்கு: இந்த வரைபடத்தில் துண்டு J மற்றும் அத்திடிய வீதி கிழக்கு: அத்திடிய வீதி தெற்கு: க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல. 173 மேற்கு: க.தி. 521002 வலயம் 7 இல், 173, 113 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு J.

**09. துண்டு 'L' - கிரிபெல்லகஹவத்தை - விஸ்தீரணம்: 0.0176 ஹெக்டயார்**

வடக்கு :க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல. 181 மற்றும் வீதி கிழக்கு : வீதி மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு J மற்றும் க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல. 113 தெற்கு: க.தி. 1521002 வலயம் 7 இல், துண்டு இல. 113 மற்றும் 114 மேற்கு: இந்த வரைபடத்தில் துண்டு M மற்றும் க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல. 116.

**10. துண்டு "M" - கிரிபெல்லகஹவத்தை - விஸ்தீரணம்: 0.0402 ஹெக்டயார்**

வடக்கு :க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல. 118, 116 மற்றும் 181 கிழக்கு : இந்த வரைபடத்தில் துண்டு L, க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல. 113 மற்றும் 114 தெற்கு: இந்த வரைபடத்தில் துண்டு L, க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல. 113, 114 மற்றும் 115 மேற்கு: க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல. 115 மற்றும் 117, இந்த வரைபடத்தில் துண்டு N,க.தி. : 521002 வலயம் 7 இல், துண்டு இல. 118 மற்றும் 116.

**11. துண்டு "N" - கிரிபெல்லகஹவத்தை - விஸ்தீரணம்: 0.0104 ஹெக்டயார்**

வடக்கு :க.தி.521002 வலயம் 7 இல், துண்டு இல. 118 மற்றும் 116 கிழக்கு : இந்த வரைபடத்தில் துண்டு M தெற்கு: இந்த வரைப்படத்தில் துண்டு ஆ, க.தி. 521002 வலயம் 7 இல், துண்டு இல. 115 மற்றும் 117 மேற்கு: க.தி.521002 வலயம் 7 இல், துண்டு இல. 117 மற்றும் 118.

EOG 05-0038

# வரையறுக்கப்பட்ட லங்கா சலுசல நிறுவனத்தில் டீ சேர்ட் துணிகள் / அபாயா துணிகள் / காற்சட்டைத் துணிகள் / தைத்த ஆடைகள் / துணித் துண்டுகள் மற்றும் பல்வேறு வகையான துணிகளை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோருதல்

- வரையறுக்கப்பட்ட சலுசல நிறுவனத்திற்குச் சொந்தமான மேற்கூறப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்காக போட்டி ரீதியிலான விலைமனுக்களைக் கோருவதற்கு பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- இதன் பிரகாரம் விலைமனுக்களை நிறுவனத்தினால் வழங்கப்படும் மாதிரிப் படிவத்திற்கு அமைய 2023 ஜூலை மாதம் 31ஆம் திகதி பி.ப. 1.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், லங்கா சலுசல நிறுவனம், இல. 93, ஜாவத்த வீதி, கொழும்பு 05 எனும் முகவரிக்கு வருகை தந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
- கேள்விகள் ஜூலை மாதம் 31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு திறக்கப்படும்.
- குறித்த விண்ணப்பப் படிவங்களை மீளளிக்கப்படாத 5000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் வழங்குவதற்கு நாம் ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். (விண்ணப்பப் படிவங்களுடன் மேலதிக விபரங்கள் அடங்கிய படிவமொன்றும் வழங்கப்படும்.)
- குறித்த பொருட்களை 2023 ஜூலை மாதம் 24ஆம் திகதி முதல் 2023 ஜூலை மாதம் 28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் பரீட்சித்துப் பார்க்கலாம் என மேலும் தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது.
- இறுதித் தீர்மானத்தை கேள்விக் குழுவின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**வ/ப லங்கா சலுசல**

**விபரங்கள்**
**0112586732/0724707974**
**ஜனக பொத்தேஜு**
**முகாமையாளர் (பெறுகைகள்)**

## வரையறுக்கப்பட்ட சீ – நோர் நிறுவனம்

(கடற்றொழில் அமைச்சு)

### மத்துமகலவில் களஞ்சியசாலைக்கான இடமொன்றை வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி

**கேள்வி இல.: 2023/Rent-Maththumagala/92**

நெடுஞ்சாலை, அதிவேக நெடுஞ்சாலைக்கு அருகாமையில் (லக்ஸ்பிரே தொழிற்சாலைக்கு அருகில்) 31/ஏ, களவ்தபிட்டிய வீதி மத்துமகல்வில் 3 ரூட்டுக்கள், 15.6 பேர்ச்சுக்களுடைய இடப்பரப்பொன்று களஞ்சியசாலை இடப்பரப்பு மற்றும் களஞ்சியசாலை ஆகியன அமைந்துள்ளன. நீர் வழங்கல், 3 வழி மின்சாரம் மற்றும் பாரமான வாகனங்களை / கொண்டெயினர்கள் போன்றவைகளையும் நிறுத்துவதற்கான போதுமானளவு வசதிகளும் உள்ளன.

- அதியுயர் விலைக்கு
- முற்பணம் - ஒரு வருடத்திற்கானது

ஒவ்வொரு ஆவணத் தொகுதிக்கும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 2500 ரூபாவையும் மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணமாக 15,000 ரூபாவையும் செலுத்திய பின்னர், வரையறுக்கப்பட்ட சீ-நோர் நிறுவன வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களிலேயே கேள்வியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2023.08.16 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் அலுவலக நேரங்களில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும். கேள்வியானது 2023.08.16 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதே நாளில் பி.ப. 2 மணிக்கு திறக்கப்படும். முன்வைப்புக்கள் 2023.08.16 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முன்னராக அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, வரையறுக்கப்பட்ட சீ-நோர் நிறுவன தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

❖ ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் வேளையில் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியன குறிப்பிடப்பட்டு தெளிவுறுத்தப்படும்.

**தலைவர் - கேள்விச் சபை,**
**வரையறுக்கப்பட்ட சீ-நோர் நிறுவனம்,**
**335(90) டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு-10.**

**தொலைபேசி: 0771906593**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

பின்வரும் உபகரணங்களுக்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-08, காசல் வீதி மகளிர் மருத்துவமனையின் விலைமனுதாரர்களுக்கான பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| | விலைமனு இல. | வழங்கல் |
|---|---|---|
| 01. | FM09/Ultrasound Scanner/2023 | Ultrasound Scanner – 01 No. |
| 02. | FM09/Biological Safety Cabinet /2023 | Biological Safety Cabinet- 01 No. |
| 03. | FM09/Phase Contrast Microscope/2023 | Phase Contrast Microscope -01 No. |
| 04. | FM09/Meckler Counting Chamber/2023 | Meckler Counting Chamber -01 No. |
| 05. | FM09/Incubator/2023 | Incubator-01 No. |

2023.07.26 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமான 2500 ரூபாவைச் செலுத்திய பின்னர் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-08, காசல் வீதி மகளிர் மருத்துவமனையின் கணக்காளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

- கொழும்பு-08, காசல் வீதி மகளிர் மருத்துவமனையின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல்.
- வியாபார பதிவுச் சான்றிதழ் (அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதி)
- உற்பத்தியாளர்களினால் அவர்களின் உற்பத்திக்கு உங்கள் கம்பனியை உள்ளூர் முகவராக நியமித்து வழங்கப்பட்ட சான்றிதழ்/கடிதம்.
- இந்த பெறுகைக்கான தகுதியை பெறுவதற்காக ஒவ்வொரு முன்வைப்பிற்கும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்படும் சான்றிதழுக்கான பணக்கொடுப்பனவு (அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதி)

உபகரணங்களுக்காக இலங்கையிலுள்ள தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள் அல்லது உற்பத்தியாளரினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஆகியோர் இந்த கேள்வியில் பங்குபற்றுவதற்கான தகுதியை பெற்றுக் கொள்வார்.

2023.08.08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மாநாட்டு மண்டபத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

2023.08.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படுமென்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற முகவர்கள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம். ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 011-2679731 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**காசல் வீதி மகளிர் மருத்துவமனை,**
**கொழும்பு-08.**

# விலைமனு அறிவித்தல்

## மேல் மாகாண சுகாதார திணைக்களம்
## மாவட்ட பொது வைத்தியசாலை, அவிசாவளை
## உள்ளக மின்சார பராமரிப்பு சேவை வழங்கல் 2023/ 2024

2023/ 2024 ஆம் ஆண்டில் எமது வைத்தியசாலையின் உள்ளக மின்சார கட்டமைப்பை பராமரிப்பதற்காக அந்தத் துறையில் தகுதியுடைய ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்வதற்கு என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. ICTAD (CIDA) பதிவு குறைந்தபட்சம் EM 5 தரத்தில் இருத்தல் வேண்டும்.

03. எந்த ஒரு நிறுவனத்திலும் வைத்தியசாலை ஒன்றில் வெற்றிகரமாக மின்சார பராமரிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல் தொடர்பில் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

04. இது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற தரப்புகளுக்கு விலைமனு ஆவணத்திற்காக 2000.00 ரூபா மீளளிக்கப்படாத பண வைப்பு ஒன்றை அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு செலுத்தி 2023.07.25 ஆம் திகதி தொடக்கம் 2023.08.14ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

05. விலைமனு ஆவணத்துடன் 40000.00 ரூபா பெறுமதி கொண்ட மீளளிக்கப்படும் பண வைப்பு ஒன்றை விலைமனு பிணையாக பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை, அவிசாவளை என்ற முகவரிக்கு பணிப்பாளரின் கணக்குக்கு வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட மே.மா.1 பற்றுச்சீட்டுடன் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளை கொண்டதாக 2023.08.15ஆம் திகதி மு.ப. 10.00க்கு முன்னர் இந்த அலுவலகத்திற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டிக்கு கொண்டுவந்து இடுவதற்கு வேண்டும்.

06. விலைமனு ஆவணத்தை இடுகின்ற உறையின் மேல் பகுதியில் மின்சார பராமரிப்பு சேவை வழங்கல் 2023/ 2024 என்று குறிப்பிட வேண்டும். 2023.08.15ஆம் திகதி மு.ப. 10.00க்கு விலைமனுவை திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு, அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

07. இந்த விலைமனு தொடர்பில் அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலை பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, அவிசாவளை.**
**தொலைபேசி: 0362222278/ 0362222261**

# குடியியல் வழக்கு நடைமுறைச் சட்டக்கோவையின் 16ஆம் பந்தியின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அறிவித்தல் நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில்

ஸோனியா லோட்ஸ் விதாரன,
இலக்கம். 50/11, சிரிபா வீதி,
கொழும்பு 05.

- வழக்காளி -

வழக்கு இலக்கம் : SPL 645/2023
தன்மை : விசேடம்
நடைமுறை : சாதாரணம்
பெறுமதி : 10,000,000/-

எதிர்-

1. எவ்ரில் நதேனியெல்ஸ்,
தலைவர்,
அஸோசியேஸன் ஒப் பிரிட்டிஸ் ரெஸிடன்ஸ்,
2. மெலனி வோடல்,
செயலாளர்,
அஸோசியேஸன் ஒப் பிரிட்டிஸ் ரெஸிடன்ஸ்,
3. கொலின் பெட்வெல்,
பொருளாளர்,
அஸோசியேஸன் ஒப் பிரிட்டிஸ் ரெஸிடன்ஸ்,
4. சுகீ ரொய்,
சமூக நடவடிக்கை ஒருங்கிணைப்பாளர்,
அஸோசியேஸன் ஒப் பிரிட்டிஸ் ரெஸிடன்ஸ்,
5. சீலா விராக்,
செயற்குழு அங்கத்தவர்,
அஸோசியேஸன் ஒப் பிரிட்டிஸ் ரெஸிடன்ஸ்,
6. வைத்தியர் லங்கா ஜயதிலக,
செயற்குழு அங்கத்தவர்,
அஸோசியேஸன் ஒப் பிரிட்டிஸ் ரெஸிடன்ஸ்,

அனைவரும்
வாயில் 1, இலக்கம். 40/9,
நீதிபதிகளின் வீடமைப்புத் தொகுதி,
பெத்தகான வீதி, பிட்டகோட்டே.

- எதிராளிகள் -

**அஸோசியேஸன் ஒப் பிரிட்டிஸ் ரெஸிடன்ஸ் சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்கும்**

2023ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் திகதியோ அல்லது அதற்கு அண்மித்த தினமொன்றில் மேல் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில் மேல் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 1 தொடக்கம் 6 வரையிலான எதிராளிகளுக்கு எதிராக மேல் இலக்கத்தைக் கொண்ட வழக்கைத் தொடுத்து வேண்டுதல்களில் ஏனைய காரணிகலுல் இருந்து கீழ்க் குறிப்பிடப்படும் நிவாரணங்கள் வேண்டியிருப்பதால்,

(இ) எதிராளிகள் மூலம் வழக்காளியின் அங்கத்துவம் இரத்துச் செய்தல் மற்றும்/ அல்லது அங்கத்துவப்பட்டியலில் இருந்து வழக்காளியின் பெயர் அப்புரப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் சட்ட விரோதமானது மற்றும்/ அல்லது அடிப்படையற்றது மற்றும்/அல்லது சங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு விரோதமானதென்று எடுத்துரைக்குமாறும்,

(ஈ) எதிராளிகள் மூலம் வழக்காளியின் அங்கத்துவம் இரத்துச் செய்தல் மற்றும்/அல்லது அங்கத்துவப்பட்டியலில் இருந்து வழக்காளியின் பெயர் அப்புரப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் அப்புரப்படுத்தி செல்லுபடியற்றதாக மேற்கொள்கின்ற கட்டளையொன்று பெற்றுத்தருமாரும்,

(உ) இவ்வழக்கு விசாரித்து தீர்மானம் மேற்கொள்ளும் வரை எதிராளிகள் மூலம் வழக்காளியின் அங்கத்துவம் இரத்துச் செய்தல் மற்றும்/அல்லது அங்கத்துவப்பட்டியலில் இருந்து வழக்காளியின் பெயர் அப்புரப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு மற்றும்/அல்லது அங்கத்தவர்களற்ற மூன்றாம் தரப்பினருக்கு அறிவிப்பைத் தடுக்கின்ற இடைக்கால தடையுத்தரவு ஒன்றை பெற்றுத்தருமாறும்,

(ஊ) இவ்வழக்கு விசாரித்து தீர்மானம் மேற்கொள்ளும் வரை எதிராளிகள் மூலம் வழக்காளியின் அங்கத்துவம் இரத்துச் செய்தல் மற்றும்/அல்லது அங்கத்துவப்பட்டியலில் இருந்து வழக்காளியின் பெயர் அப்புரப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு மற்றும்/அல்லது அங்கத்தவர்களற்ற மூன்றாம் தரப்பினருக்கு அறிவிப்பைத் தடுக்கின்ற இடைக்கால தடையுத்தரவு ஒன்று பெற்றுத்தரும் வரை அந்நடவடிக்கைகளை தடுக்கின்ற தடையுத்தரவு ஒன்று பெற்றுத்தருமாறும்,

(எ) எதிராளிகள் மூலம் இவ்வழக்கு விசாரித்து தீர்மானம் மேற்கொள்ளும் வரை வழக்காளி மூலம் அவரது அங்கத்துவ உரிமை நடைமுறைப்படுத்துவதற்கு எந்தவொரு வழியிலும் தடையை ஏற்படுத்துகின்ற மற்றும் /அல்லது தடுக்கின்ற எதிராளிகளைத் தடுக்கின்ற இடைக்கால தடையுத்தரவு ஒன்றை பெற்றுத்தருமாறும்.

(ஏ) எதிராளிகள் மூலம் இவ்வழக்கு விசாரித்து தீர்மானம் மேற்கொள்ளும் வரை வழக்காளி மூலம் அவரது அங்கத்துவ உரிமை நடைமுறைப்படுத்துவதற்கு எந்தவொரு வழியிலும் தடையை ஏற்படுத்துகின்ற மற்றும்/அல்லது தடுக்கின்ற எதிராளிகளைத் தடுக்கின்ற இடைக்கால தடையுத்தரவு ஒன்றை பெற்றுத்தரும் வரை அந்நடவடிக்கைளை தடுக்கின்ற தடையுத்தரவு ஒன்று பெற்றுத்தருமாறும்.

(ஐ) பிராதுடன் வ.20 என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள மின்னஞ்சல் கடிதத்திற்கமைய செயற்படுவதனை இவ்வழக்கு விசாரித்து தீர்மானம் மேற்கொள்ளும் வரை எதிராளிகளைத் தடுக்கின்ற இடைக்கால தடையுத்தரவு ஒன்றை பெற்றுத்தருமாறும்.

(ஒ) பிராதுடன் வ.20 என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள மின்னஞ்சல் கடிதத்திற்கமைய செயற்படுவதனை இவ்வழக்கு விசாரித்து தீர்மானம் மேற்கொள்ளும் வரை எதிராளிகளைத் தடுக்கின்ற இடைக்கால தடையுத்தரவு ஒன்றை பெற்றுத்தரும் வரை அந்நடவடிக்கைகள் தடுக்கின்ற தடையுத்தரவு ஒன்று பெற்றுத்தருமாறும்.

(ஓ) வழக்குச் செலவுகளும் மற்றும்

(ஔ) கௌரவ மன்றிற்கு பொருந்தும் எனக்கருதுகின்ற ஏனைய மற்றும் மேலதிக நிவாரணங்கள் பெற்றுத்தருமாறும்.

வேண்டி நிற்பதோடு இவ்வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

இன்னும் மேல் இலக்கத்தைக் கொண்ட SPL 645/2023 எனும் வழக்கு நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில் 2023.08.01 ஆம் திகதி முற்பகல் 9.00 க்கு அழைக்கப்படும்.

**நீதிமன்றக் கட்டளைப்படி**
**பதிவாளர்**
**நுகேகொடை மாவட்ட நீதிமன்றம்**
**நுகேகொடை**

**2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதியன்று**

# 'பசிதீர்ந்த பின்னர் படிப்பூட்டும் செயல்திட்டம்'

## நாடு தழுவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு பகல் போசனம் வழங்கும் திட்டத்தை செயற்படுத்தி கொண்டிருக்கும் செல்வராசா முரளீதரன்..



நேர்காணல்
இக்பால் அலி

**ஐயமிட்டுண் நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குனர் எஸ். முரளிதரன் அவுஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழ் மக்களின் செம்மொழியான தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக பங்காற்றி அந் நாட்டின் மன்னரின் அதி விசேட உயர்தர விருதினைப் பெற்ற ஒருவர். அதே போன்று மெல்போர்ன் முத்தமிழ் மன்றத்தின் மனித நேயப் பண்பாளர் விருது, குண்டசாலை விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தின் சமூக ஜோதி ஞான தீப விருது எனப் பல தரப்பட்ட பட்டங்களையும் பாராட்டுக்களையும் பெற்ற சமூகப் பணியாளர். ஐயமிட்டுண் என்ற நிறுவனத்தின் ஊடாக இலங்கையின் கல்வி மேம்பாட்டுக்காக அயாராது உழைத்து வரும் செல்வராசா முரளீதரன் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.**

### உங்கள் ஆரம்ப வாழ்க்கை பற்றிய குறிப்புக்கள்?

வடமாராச்சி சுன்னாலை என்கின்றகுக் கிராமத்தில் பிறந்தேன். அப்பா நாகநாதன் செல்வராசா. அம்மா கமலகுமாரி வேலுப்பிள்ளை. எங்கள் குடும்பத்தில் ஐந்து பேர். எனது தம்பி கிரிதரன் உயிர் இழந்து விட்டார். மூன்று சகோதரிகள் அதில் மூத்த சகோதரி பேராசிரியர் குமுதினி ரமேஸ் யாழ். பல்கலைக்கழகத்தில் கடமையாற்றுகிறார். இரண்டாவது சகோதரி கணக்காளர் சாந்தினி சண்முகநாதன். அவர் லண்டனில் வசிக்கின்றார். மூன்றாவது சகோதரி சட்டத்தரணி சாமினி உதயக் குமார். அவரும் லண்டனில் வசிக்கின்றார். எனது மனைவி சுகன்யா முரளீதரன். அவர் ஒரு வைத்தியர். மெல்போனில் பணி புரிகின்றார். ஹரிசன், நிரூசன், அபிசன் என்று மூன்று ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். மூன்று ஆண் பிள்ளைகளும் மிருதங்கத்தில் பாண்டித்தியம் பெற்று அரங்கேற்றம் செய்தவர்கள். அத்தோடு கல்வியிலும் அதி திறன்மிக்கவர்கள் என்று குறிப்பிடலாம்.

### உங்களது கல்வி, சமூகப் பணிகளில் ஈடுபடுவதற்கான தூண்டுகோலான காரணிகள் குறித்தும் கூறுவீர்களா?

நான் ஹாட்லிக் கல்லூரியில் கல்வி கற்றேன். அப்பொழுது 11, 12 வகுப்பில் கல்வி பயிலும் கால கட்டத்தில் மாணவத் தலைவனாகத் தெரிவு செய்யப்பட்டேன். ஒழுக்காற்றுப் பணிகளை ஆற்றியுள்ளேன். சாரணிய இயக்கத்தில் இணைந்து தலைமைத்துவ சாரணிய பயிற்சிகளைப் பெற்று செயற்பட்டமையால் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனாவின் விருதினைப் பெற்றுக் கொண்டேன். நான் படிக்கின்ற காலத்தில் 1978 இல் கிழக்கு மாகாணத்தில் பாரியதொரு சூறாவளி அனர்த்தம் ஏற்பட்டது. அப்பொழுது பாடசாலையிலுள்ள சாரணிய இயக்கத்தில் உள்ள நான்கு பேர் நிவாரண உதவிகளைப் புரிவதற்காக கிழக்கு மாகாணம் சென்றோம். அங்கு பல தொண்டுப் பணிகளில் ஈடுபட்டோம். வாழைச்சேனை கிண்ணியடி என்ற கிராமத்தில் உள்ள மக்களுக்கு உலருணவு நிவாரண உதவிகளைச் செய்தோம். உலருணவுப் பொதிகள், உடைகள் என்பன வழங்கி வைத்தோம். இது என்னுடைய ஆரம்ப சமூப் பணியாகும். சாரணர் என்ற முறையில் பல

திருவிழாக்களில் உதவிகளைச் செய்வோம். இக்கால கட்டத்தில்தான் சமூகத்திற்குச் செய்த உதவிகளின் மூலம் அடைந்த ஆத்ம திருப்தியினை கண்கூடாகப் பார்த்தேன். சமூகத்தோடு சேர்ந்து செயற்படுகின்ற போது சில உதவிகளைச் செய்ய முடிகின்றது என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. இதற்கு ஹாட்லி கல்லூரிதான் என்னுடைய சமூகச் செயற்பாட்டுக்கு முக்கியமான காரணம்.

நான் தொடர்ந்து ஹாட்லிக் கல்லூரியில் க. பொ. த. உயர் தரம் வரை கற்று யாழ். பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டேன். விஞ்ஞானப் பிரிவில் விசேட சிறப்புக் கற்கையினை மேற்கொண்டு அங்கு விரிவுரையாளராக கடமையாற்றினேன். இலங்கை பகுப்பாய்வுத் திணைக்களத்தில் உயர் பதவி நியமனம் கிடைத்தது. கொழும்பில் பத்து வருடம் வேலை செய்தேன். அப்பொழுது ஐக்கிய நாடுகள் சபையின் புலமைப் பரிசில்கள் கிடைத்தன. அதன் மூலம் பல நாடுகளுக்குச் சென்று மருந்து அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டேன். உனைஸ் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டப் படிப்பை மேற்கொள்வதற்காக புலமைப் பரிசில் கிடைத்தது. அங்கு சென்று என்னுடைய வாழ்க்கையை ஆரம்பித்தேன்.

அக்கால கட்டத்தில் அவுஸ்திரேலியாவிலுள்ள புலம்பெயர் தமிழ் மாணவர்களுக்கு தமிழைக் கற்றுக் கொள்வது ஒரு பெரும் சவாலாக இருந்தது. அவர்களுக்கு தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் நான் ஆர்வமாக இருந்தேன். கடந்த 25 வருடங்களுக்கு முன் அவுஸ்திரேலியாவில் உள்ள பாடசாலைகளில் தமிழ் மொழியை மாணவர்கள் க. பொ. த உயர்தரத்தில் இணைத்துக் கொள்ளவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டன. அதன் பின்பு தமிழ் பாடம் பல்கலைக்கழகம் நுழைவதற்கான ஒரு பாடமாக ஆங்கீகாரம் செய்யப் பட்டு போதிக்கப்பட்டு வருகின்றன. தமிழைக் கற்று இன்று அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்



லுகின்றார்கள். அதில் என்னுடைய பாரிய பங்கை செலுத்தியிருக்கின்றேன்.

### நீங்கள் இலங்கை மக்களுக்கு எவ்வகையிலான உதவிகளை மேற்கொண்டு வருகின்றீர்கள்?

வடக்கு கிழக்கு மலையகம் உள்ளிட்ட மிக முக்கியமான தமிழ் உறவுகளுக்கு எங்களுடைய வசதிக்கு ஏற்ற வகையில் இவ்வுறவுகளுக்கு கல்வி உள்ளிட்ட ஏதோ ஒரு வகையிலான தேவைக்கு ஏற்ப பல உதவிகளைச் செய்து வருகின்றோம். அந்த உதவிப் பயணத்தில் எங்களுடைய மாணவச் செல்வங்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கும் ஏதோ ஒரு விதத்தில் உதவி செய்ய நாங்கள் விரும்பி இருந்தோம். அந்த அடிப்படையில் நாங்கள் ஆரம்பத்தில் இணையக் கல்வியை மாணவர்களுக்கு கொண்டு செல்ல வேண்டிய தேவை இருந்தது. ஆசிரியர் இல்லாத பாடசாலைகளுக்கு மின்னொளி வடிவத்திலும் பாடங்களை இணையத்திலும் ஒக்ரைல் படிப்பிப்பதற்கான விரலிகள் மூலம் செய்து கொடுத்து வந்தோம்.

கடந்த எட்டு வருடங்களாக கல்விப்பயணத்தில் ஈ கல்வி முறையில் நான் நான்கு வருடம் தலைவராகப் பணி புரிந்தேன். இலங்கையிலுள்ள சகல இடங்களிலும் இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தமையால் கடந்த வருடம் ஒவ்வொரு தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கும் செல்ல வேண்டி நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்பொழுது பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களை நேரடியாக நான் கண்ணால் காணக் கூடியதாக இருந்தது. மாணவர்களின் வரவுப் பதிவு உணவில்லாத தன்மை, பெற்றோர்களுடைய



வாழ்வாதாரத்தில் ஏற்பட்ட பெரிய வீழ்ச்சி. இவை தொடர்ந்தும் பணம் படைத்த மக்களை நோக்கி இலவசக் கல்வி நகருமோ என்ற பயத்தினை நாங்கள் எதிர்நோக்க வேண்டியிருந்தது. அதற்காக நாங்கள் உடனடியாக சில வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டி இருந்தது.

ஏனென்றால், வாழ்க்கையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் கல்வியை விட வேண்டிய ஒரு நிலைமை இருந்தது. கடந்த வருடம் ஜூன், ஜுலை மாதங்களில் பாடசாலைகளுக்குச் செல்வதைக் கூட குறைத்துக் கொண்டார்கள். இந்த நிலையில் எங்களால் செய்யக் கூடிய உதவி ஒன்று இருந்தது. அது மாணவர்களுக்கு உணவைக் கொடுப்பதாகும்.ஆனால் இதை பாடசாலை செய்ய வேண்டும். வீடுகளில் வைத்துக் கொடுக்கக் கூடாது என்கின்ற சிந்தனையில் தான் பாடசாலையில் உணவைக் கொடுத்து பாடசாலைக்கு மாணவர்களை வரவேற்போம் என்ற சிந்தனையில் எங்களுடைய ஐயமிட்டுண் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

ஐயமிட்டுண், நான் பிறந்த பிரதேசமான பருத்தித்துறை சுன்னாலை மந்திய என்ற இடத்திலுள்ள அரசினர் வைத்தியசாலையில் எங்களுடைய பெற்றோர் சார்பிலுள்ள வயோதிபர்ளுக்கு உணவில்லாமல் உடை இல்லாமல் இருப்பவர்களுக்கு உணவு உடைகளைக் கொடுத்து அவர்களுடைய ஆரோக்கியமான சுகாதார நல்வாழ்வுக்கான உதவிகளைச் செய்தோம். கொரோனா தொற்றுக் காலத்தில் இப்படி பல வேலைகள் செய்தோம்.

மேலும் ஒரு கதிர் இயக்கப் பிரிவு ஒன்றை நானும் எனது துணைவியாரும் சேர்ந்து நிர்மாணித்துக் கொடுத்துள்ளோம். கர்ப்பிணித் தாய்மார்களின் பிள்ளைகளின் வளர்ச்சியை அறிவதற்கான வாய்ப்பை நாங்கள் கட்டாயம் வழங்க வேண்டும். எங்களது அனைவரது சொத்து செல்வங்கள் எல்லாம் எங்களுடைய குழந்தைகள் ஆகும். குழந்தைகள் எப்பொழுதும் போசாக்கு உடையவர்களாக இருத்தல் வேண்டும். எனவே கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மிக முக்கியமாகத் தேவையாக இருப்பது கதிர் இயக்கப் பிரிவு. அதனை நாங்கள் வழங்கியிருந்தோம்.

எங்களுடைய மாணவர்களின் பசியைப் போக்க வேண்டிய காலத்தின் நியதியால் அந்த சேவையை பூர்த்தி செய்வதற்கான ஒரு முயற்சியாகத்தான் கடந்த ஒரு வருடகாலமாக பாடசாலைக்கு உணவைக் கொடுத்து கல்வியைத் தக்க வைக்கின்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றோம். அந்தச் செயற்பாட்டின் அடிப்படையில் மலையகம், கிழக்கு, வடக்கு மாகாணத்தில் உள்ள மிக முக்கியமான வறிய பாடசாலைகளை ஒரு பரீட்சார்த்தமாகத் தெரிவு செய்து அங்குள்ள பெற்றோர்களை வரவழைத்து பெற்றேர்களது சமூகப் பங்களிப்பினால் மட்டுமே இது சாத்தியமாகும் என்ற எண்ணக்கருவை 100 விகிதம் எடுத்து இருந்தோம்.

ஏனென்றால் அரசாங்கம் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ரூபாய் 90, 60 எனக் கொடுத்து பாரிய திட்டத்தைச் செய்திருந்தாலும் அவர்களது திட்டம் கொரோனா தொற்றுக் காரணமாக பணமில்லாமல் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

மாணவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டிய தேவை மிகவும் அவசியமாக உள்ளது என்பதை கல்வி அதிகாரிகள் எங்களிடம் வேண்டுகோள் முன்வைத்திருந்தார்கள். ஆகவே சமூகத்தை இணைத்து உணவைக் கொடுக்கின்ற என்ற சிந்தனையில் ஆரம்பத்தில் நாங்கள் ஒரு பிள்ளைக்கு 75 ரூபாவாக பணம் செலவு செய்து கொடுக்கலாம் எனத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் அது எங்களால் தொடர முடியவில்லை. ஒரு மாணவனுக்கு 75 வழங்குவது என்பது எங்களால் சாத்தியமில்லாமல் இருந்தது. அந்த நிலைமையில் எங்களுடைய நிகழ்ச்சி நிரலில் சிறிய மாற்றத்தைக் கொண்டு வந்தோம். ஐயமிட்டுண் அமைப்பினை உருவாக்கி ஐயமிட்டுண் அட்சய பாத்திரத்தை உருவாக்கினோம். ஐயமிட்டுண் என்பது ஒரு பெட்டியாகும். அதில் சகல மாணவர்களும் தங்களால் இயன்ற ஒரு சிறிய மரக்கறியைக் கொண்டு வருதல் வேண்டும். மரக்கறி என்பது பெரியளவில் அல்ல. ஒரு பயிற்றங்காய், ஒரு வெண்டிக்காய், ஒரு மிளகாய், ஒரு வெங்காயம் என தங்களால் வழங்கக் கூடிய ஒரு மரக்கறி கொண்டு வருதல் வேண்டும். 200 மாணவர்கள் கொண்டு வரும் போது மாணவர்களுக்கு உணவைத் தயார்படுத்துவதற்கு போதுமானளவு இருந்தது.

மேலும் நாங்கள் அரிசியைக் கூட பெற்றோர்களிடம் ஒரு பிடி அரிசியை நீங்கள் ஒவ்வொருவரும் சேர்த்து வைத்துத் தந்தீர்கள் எனில் அவை எங்களுடைய மாணவர்களுக்குப் போதுமானதாக இருக்கும். இந்த இடத்தில் நாங்கள் மாணவர்களுக்கான மரக்கறிகளை பெற்றோர்கள் மாணவர்களுடைய பங்குகள் மூலமும் பெறக் கூடியதாக இருந்தது. அதைச் சமைப்பதற்காக பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்களை வரவழைத்து 'நீங்கள் தான் இந்த உணவைச் சமைக்க வேண்டும். இந்த உணவை சமைப்பதற்காக கூலி நாங்கள் தரமாட்டோம். உங்களுடைய பிள்ளைகளின் கல்விக்கு நீங்களும் ஒத்துழைப்புச் செய்தால் தான் பிள்ளைகளுடைய கல்விக்கு உதவி செய்யலாம்' என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினோம். அந்த வகையில் பெற்றோர்கள் பாடசாலைகளுக்கு வந்து சமைக்கத் தொடங்கினார்கள்.

நாங்கள் ஒரு பிள்ளைக்கு தலா ரூபாய் 75 விகிதம் உணவு வழங்குவற்கு செலவு செய்ய வேண்டும். ஆனால் அந்தத் தொகை உடனடியாக ரூபா 25 வாக மாறியது. ஆகவே இன்னும் எங்களால் ஊக்கத்துடன் செயற்பட்டோம். பெற்றோர்களை 100 விகிதம் இந்த செயற்பாட்டைச் செய்ய முன்வந்தனர். இதற்கு ஐயமிட்டுண் அமைப்பின் ஊடாக தேவைகளை அறிந்து பருப்பு, சோயா, போன்றவற்றை வாங்கிக் கொடுத்தனர். மேலும் உணவு தயாரிப்பதற்குத் தேவையான வெள்ளைப்பூடு, சீரகம், மிளகு, தேங்காய் எண்ணெய், பாத்திரங்கள் போன்ற ஏனையவற்றையும் பெற்றுக் கொடுத்தனர்.

### நீங்கள் இந்த உணவு வழங்கும் செயற்பாட்டை பரந்துபட்ட முறையில் நடைமுறைப்படுத்துகிறீர்களா?

இன்று நாங்கள் சுமார் 15,000 க்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு பகல் உணவுத் திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றோம். பசறை, நுவரெலியா, பொரகஸ்லந்த போன்ற பகுதிகளிலும் கண்டியிலுள்ள குண்டசாலை, கந்தகெட்டியவிற்கும் கொடுக்கின்றோம். கிழக்கு மாகாணத்தில்







பானமை, ஏறாவூர், வாழைச்சேனை, மீராவோடை, வாகரை கட்டுமுறி போன்ற இடங்களுக்கும் கொடுக்கின்றோம். வட மாகாணத்தில் மன்னார், வவுனியா குருங்காளிக் குளம் , கிளிநொச்சியில் ஐயனார்புரம், அம்பாள் புரம், யாழ்ப்பாணத்தில் வசாவிளான் ,திருகோணமலை வெருகல், திருவள்ளுவர் பாடசாலை எனப் பரந்து பட்ட அடிப்படையில் இத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

எங்களுடைய நோக்கம் இப்படியான ஒரு விழிப்புணர்ச்சியின் ஊடாக எமது சமூகமே பாடசாலைகளில்; இந்த கட்டமைப்பை எடுத்துச் செல்ல வேண்டும். அதன் மூலம் மாணவர்களுடைய பசிக்கு சமூகமாகச் சேர்ந்து பாரியதொரு பங்களிப்பைச் செய்த நன்மை கிட்டும். தயக்கமின்றி கல்வியைத் தொடரலாம்.

எங்களுடைய கல்விப் பயணத்தில் கடந்த எட்டு வருடங்களாக சிறந்த



ஒரு செயற்பாட்டைச் செய்து கொண்டிருக்கின்றோம் என்பது பலருக்கும் தெரியும். அந்த வகையில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படும் ஆரம்பப் பிரிவில் இருந்து இடை நிலை கல்வி முடியும் வரையிலும் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை வழங்கியிருக்கின்றோம். மேலும் அங்குள்ள மாணவர்களுக்காக சுயகற்றலை ஊக்குவிப்பதற்கு விரலிகள் மூலம் பாடங்களை தொலைக்காட்சி வடிவத்தில் வழங்கி வருகின்றோம். கொரோனாக் காலங்களில் கல்வியைப் புகட்டுவதற்காக முன்னிலையில் நின்று செயற்பட்டுள்ளோம். அந்த நிலையில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொண்டார்கள் என்பதை நாம் யாவரும் அறிவோம்.

எங்களுடைய நோக்கம் கல்விக்குரிய பாடசாலைக்கு ஆசிரியர்களை வழங்குவதற்கும் கல்வி கற்றலுக்கான உபகரணங்களை வழங்கி வருகின்றோம். போசாக்கு உணவுத் திட்டத்தை உருவாக்கி நல்லதொரு மாணவர் சமூகத்தை உருவாக்குவதற்கான அடிப்படைத் தேவையை எம்மால் இயன்றளவு ஐயமிட்டுண் நிறுவத்தின் ஊடாக நிறைவு செய்கின்ற முயற்சியில் தொடர்ந்து உழைக்கின்றோம். இவ்வாறு எங்களது கல்வி மேம்பாட்டுத் திட்டத்தை நாடெங்கும் பரந்த மட்டத்தில் மேற்கொண்டு வருகின்றோம்.

### இந்த செயற் திட்டத்தின் மூலம் கிடைத்த அடைவுகள் பற்றிக் கூறுவீர்களா?

ஐயமிட்டுண் என்ற உணவு செயற்திட்டத்தை ஒரு வருடமாக காலமாக மேற்கொண்டு வருகின்றோம். இதனைத் தொடங்குகின்ற போது இந்த உணவுத் திட்டத்தின் மூலம் கல்விக்கான ஓர் இலக்கை அடைய முடியுமா என்று எண்ணினோம். உணவைக் கொடுத்து கல்வியைத் தக்க வைப்பதற்கு சமூகத்தினுடைய 100 விகிதம் உச்ச கட்டப் பங்களிப்பை பெற்றுக் கொள்வதே எமது நோக்கமாக இருந்தது. இதற்கு சமூகத்தின் ஒத்துழைப்பு 100 விகிதம் கிடைத்தல் வேண்டும். அதாவது வெளியில் இருந்து பணம் பாடசாலைக்குச் செல்லாமல் தங்களுடைய சுய முயற்சியில் பெற்றோர்களுடைய உடல் உழைப்பின் பங்களிப்புடன் பாடசாலைகள் எழுந்து நிற்றல் வேண்டும். ஒரு தொண்டு நிறுவனத்தினால் உணவுச் செயற்பாடு நடைபெறும் போது சமூகப் பங்களிப்பு 100 விகிதம் நேரடியாகச் சேர்ந்து இயங்குதல் வேண்டும். அதுதான் எங்களுடைய குறிக்கோளாக இருந்தது. ஐயமிட்டுண் நிறுவனத்தின் செயற்பாடு சமூகப் பங்களிப்பை உச்ச கட்டமாகப் பயன்படுத்தி வெளியிடங்களில் இருந்து வரும் நிதியை மிகவும் குறைத்து மற்றைவர்களிடத்தில் தங்கியிராமல் சொந்தக் காலில் நிற்றல் வேண்டும்.

கிளிநொச்சியில் உணவு வழங்கும் செயற் திட்டத்தில் ஒரு வருடத்தில நாங்கள் அடைந்த மிகப் பெரிய வெற்றி எனக் எடுத்துக் கொள்ளலாம். சாத்தியமற்றதை சாத்தியமாக்கிக் காட்டியுள்ளோம். கிளிநொச்சி அம்பாள்புறத்திலுள்ள விவகானந்தா வித்தியாலய அதிபர் கே. ஆர். லட்சுமி மாணிக்கவாசகர் மிகவும் சிறந்த ஓர் அதிபர். சமூகமும் ஆசிரியர்களும் அவருக்கு 100 க்கு 100 விகிதம் பங்களிப்பை வழங்குகிறார்கள். எங்களது உணவுச் செயற்பாடு அப்பாடசாலையில் 12 மாதங்களுக்கு முன் ரூபா 63.12 சதங்களுக்கு ஆரம்பிக்கப்பட்டது. இது பற்றிய ஆய்வுக் கூட்டம் இரு வாரங்களுக்கு ஒரு முறை நடைபெறும். அந்த ஆய்வு அறிக்கையின்படி நேற்று முன்தினம் ரூபாய் 8.13 சதத்திற்கு ஒரு மாணவனுக்கு உணவளிக்கச் செலவிட முடியும் என்று தங்களது கணக்கறையில் குறிப்பிட்டுள்ளனர். இது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விசயம். ஏனென்றால் ஒரு கடையில் நான்கு கறியுடன் 400450 ரூபாவுக்கு குறைய சாப்பாடு வாங்க முடியாது. இப்பாடசாலையில் ரூபா 8.15 சதத்திற்கு பகல் உணவைக் கொடுப்பது என்றால் அந்த ஊர் சமூகத்தின் சமூக அர்ப்பணிப்பு எவ்வாறு இருக்கிறது என்பதைப் பார்த்தல் வேண்டும். சகல விதமான மரக்கறிகளையும் தங்களுடைய பாடசாலைத் தோட்டத்தில் எடுக்கின்றார்கள்.

பெற்றோர்கள் தங்களால் இயன்ற ஏதாவது ஒன்றை தன்னுடைய பிள்ளைகளுக்குத் தானே என்று வழங்கி வருகிறார்கள். படிக்கின்ற பிள்ளைகளுக்குத் தானே இந்த உணவுகளை வழங்குகின்றோம் என்ற உணர்வு இருக்குமாயின் ஒரு எள்ளு என்றாலும் ஏழாகப் பிரித்துச் சாப்பிட வேண்டும் என்ற நல்லுள்ளங்களால் இது முடியும்.

இந்த வேலைத் திட்டத்தை யாரும் வந்து நேரடியாகப் பார்க்கலாம். உலக உணவு நிறுவனம் வந்து பார்த்துச் சென்றுள்ளனர். வட மாகாணத்தின் செயலாளர் எஸ். எம். சமன் பந்துலசேன நேரடியாக பாடசாலைக்கு வந்து பல மணித்தியாலங்கள் இருந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார். அவர் இந்தச் செயற்திட்டத்தைப் பார்த்து பாராட்டியதுடன் இந்தச் செயற்பாடுகளை சகல வறிய பாடசாலைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று அங்கு வருகை தந்த செயலாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்வி அமைச்சின் செயலாளர், ஏனைய அமைச்சிலுள்ள ஏனைய அதிகாரிகளையும் சந்தித்து அவர்களிடம் எங்களது செயற்பாடுகளை தெரிவித்தேன். அதேவேளையில் பகல் உணவுத் திட்டத்தை எவ்வாறு வினைத்திறனுடன் பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிக்கலாம் என்ற திட்டத்தை கல்வி இராஜங்க அசைச்சர் ரவிந்த குமார் அவர்களையும் சந்தித்து தெளிவு படுத்தியுள்ளேன். அவரும் இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு தன்னால் இயன்ற உதவிகளை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

### நீங்கள் அவுஸ்திரேலியாவில் செம்மொழியான தமிழ் மொழியைக் கற்பிப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டுள்ளீர்கள் அது குறித்தும் அதன் சாதனைகள் பற்றியும் கூறுவீர்களா?

அவுஸ்திரேலியா அரசாங்கம் மன்னர் ஆட்சியின் திட்டத்தின் அடிப்படையில் தான் இயங்குகிறது. அந்த நாட்டினுடைய சிறந்த பிரஜைகளை கௌரவப்படுத்தும் வகையில் விசேட நாள் ஒன்றை அதற்கென ஒதுக்கி பொது அறிவிப்பினை விடுத்து அதி உச்ச விருது வழங்கி கௌரவித்து வருகின்றனர். சமூகத்தினுடைய செயற்பாடுகளை அந்த சமூகத்தின் தெரிவின் ஊடாகத் தான் அந்த அதி உயர் விருது வழங்கப்பட்டு வருகின்றது.

அவுஸ்திரேலியா நாட்டில் 26-01 2023 ஆம் ஆண்டில் அதி உயர் விருது எனக்கு வழங்கப்பட்டது. தமிழ் மக்களின் கல்விச் சேவைக்கான விருதைத் தந்தார்கள். என்னுடைய பெயரோடு இணைத்து 'மெடல் போ ஒன்டரல் அவுஸ்திரேலியா' ( என்ற இப்பட்டத்தை வழங்கியுள்ளனர். அவுஸ்திரேலிய அரச மன்னர்தான் இந்த விருதினை வழங்கினார். இது ஓர் அதி உயர் விருது ஆகும்.

அவர்கள் கல்விக்காக தமிழ் சமூகத்திற்குச் செய்த சேவையை மதித்து தந்தனர். உண்மையிலேயே எனக்கு பெருமை தரும் விடயமாகும். ஒரு தமிழ் மகனுக்கு 45 வருடங்களுக்குப் பின் கிடைத்திருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

அதேபோன்று மெல்போனில் முத்தமிழ் மன்றம் என்ற பெரிய அமைப்பு இருக்கின்றது. சிறந்த மனித நேயப் பண்பாளர் என்ற சிறப்புப் பட்டத்தையும் விருதினை வழங்கி கௌரவித்துள்ளார்கள். மனித நேயச் செயற்பாட்டாளன் என்ற விருதுகள் பல அமைப்புக்களால் வழங்கப்பட்டுள்ளன. எனினும் இந்த விருதுகளுக்காக எமது சேவைகளைச் செய்யக் கூடாது என்பது என்னுடைய கருத்தாகும். இதனை நாங்கள் பெரியதாக கூறிக் கொள்வதில் அர்த்தமில்லை. எங்களது செயற்பாடுகளின் ஊடாக எங்கள் மாணவர்களின் கல்வியில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தால் அதனை உண்மையான விருதாக நான் பார்க்கின்றேன்.

# சிட்டி லீக் தலைவர் கிண்ணத்தின் இறுதிக்கு கொழும்பு முன்னேற்றம்



சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து தொடரின் இறுதிச் சுற்றின் முதல் போட்டியில் வெற்றியீட்டிய கொழும்பு கால்பந்து கழகம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. கொழும்பு கால்பந்து கழகம் மற்றும் ஜாவாலேன் இடையிலான போட்டியில் கொழும்பு கால்பந்து கழகம் 3–1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியதோடு, மொரகஸ்முல்ல விளையாட்டு கழகம் மற்றும் மாளிகாவத்தை யூத் அணிகளுக்கு இடையிலான போட்டியில் பெனால்டி சூட் அவுட் முறையில் மாளிகாவத்தை யூத் 4–3 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இதன்படி ஜாவாலேன் மற்றும் மாளிகாவத்தை யூத் அணிகளுக்கு இடையிலான எதிர்வரும் ஜூலை 30 ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டியில் வெற்றிபெறும் அணி கொழும்பு அணியுடனான இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும். தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் 6 ஆம் திகதி பிற்பகல் 3.30க்கு சிட்டி லீக் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு கால்பந்து கழகம் மற்றும் ஜாவாலேன் இடையிலான போட்டியில் முதல் பாதியில் 1–0 என கொழும்பு அணி முன்னிலை பெற்றது. 19ஆவது நிமிடத்தில் மொஹமட் மசீத் கோல் பெற்றதோடு, 49 ஆவது நிமிடத்தில் அதற்கு பதிலடியாக சி.வி. சந்தருவன் ஜாவாலேன் அணிக்கு கோல் பெற்றுக்கொடுத்தார். எனினும் 66 ஆவது நிமிடத்தில் கே.ஈ.பி. பெரேரா கோல் ஒன்றை பெற்றதோடு 75 ஆவது நிமிடத்தில் மொஹமட் நௌமான் ஒன்கோல் பெற கொழும்பு அணிக்கு சாதகமாக அமைந்தது.

மொரகஸ்முல்ல விளையாட்டு கழகம் மற்றும் மாளிகாவத்தை யூத் அணிகள் இடையிலான போட்டியின் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல் பெறாத நிலையிலேயே முடிவை தீர்மானிப்பதற்கு பெனால்டி சூட் அவுட் முறை கடைப்பிடிக்கப்பட்டது.

6ஆவது முறையாகவும் இடம் பெறும் சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து தொடரில் வெற்றி பெறும் அணிக்கு 150,000 ரூபாவும் இரண்டாம் இடத்தை பெறும் அணிக்கு 100,000 ரூபாவும் வழங்கப்படவிருப்பதோடு ஒவ்வொரு போட்டியிலும் திறமையை வெளிப்படுத்தும் வீரர்களுக்கு பரிசு வழங்கப்பட்டு வருகிறது. சிட்டி லீக் கால்பந்து லீக்கின் தலைவர் ஆர். புவனேந்திரனின் தனிப்பட்ட நிதி மூலமே அனுசரணை வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அறுகம்பே அரை மரதனில் ரத்னபால, தெரேஸ் வெற்றி

அட்டாளைச்சேனை தினகரன், பாலமுனை விசேட நிருபர்கள்



சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டு அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்து நடாத்திய அறுகம்பே அரை மரதன் ஓட்டப்போட்டியின் பிரதான ஆடவர் பிரிவில் மஹியங்கனையைச் சேர்ந்த ரீ.டபிள்யூ. ரத்னபாலவும் மகளிர் பிரிவில் ஆஸ்திரியாவைச் சேர்ந்த தெரேஸ் ஈடரும் முதலிடத்தை வென்றனர்.

சுமார் 200 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வீர, வீராங்கனைகளுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்ற இந்தப் போட்டியில் 21.1 கிலோமீற்றர் கொண்ட பிரதான அரை மரதன் போட்டி தவிர 10 கி.மீ மற்றும் 5 கி.மீ தூரம் கொண்ட மரதன் போட்டிகளும் இடம்பெற்றன. இதில் 10 கி.மீ. பிரிவில் ஜெர்மனியை சேர்ந்த மார்க்னெஸ் முதலிடத்தை பெற்றதோடு 5 கி.மீ. பிரிவில் கல்முனையை சேர்ந்த நிஹான் முதலிடத்தை வென்றார்.

அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் இஸட்.எம். ஹாஜித் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

# சாலியபுர அணி வெற்றி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



அனுராதபுரம் இஹலகொட்டியாவ ஹீரோ விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சாலியபுர விளையாட்டு கழகம் சம்பியனானது.

இஹலகொட்டியாவ முஸ்லிம் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (23) நடைபெற்றது இறுதிப் போட்டியில் மதவாச்சி விளையாட்டு கழகத்தை சாலியபுர அணி தோற்கடித்தது. இந்த தொடரில் 40 அணிகள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# 166 ஓட்டங்களுக்கு சுருண்டது இலங்கை அணி



பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 166 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தடுமாற்றம் கண்டுள்ளது. இதனால் முதல் இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி வலுவான நிலையை பெற்றுள்ளது.

முதல் டெஸ்ட் போட்டியில் நான்கு விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்த நிலையில் இந்தப் போட்டியில் இலங்கை அணியில் இரு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

முதல் டெஸ்டில் ஆடிய வேகப் பந்து வீச்சாளர்களான கசுன் ராஜித்த மற்றும் விஷ்வ பெர்னாண்டோவுக்கு பதில் அசித்த பெர்னாண்டோவுடன் டில்ஷான் மதுஷ்க தனது கன்னி டெஸ்ட் போட்டியில் ஆட அழைக்கப்பட்டார். எஸ்.எஸ்.சி மைதானத்தில் நேற்று (24) ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டி கடும் மழையால் அரை மணி நேரம் தாமதித்தே தொடங்கியது. நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

ஆரம்ப வீரர் நிஷான் மதுஷ்க, நசீம் ஷா வீசிய முதல் ஓவரில் பௌண்டரியுடன் ஓட்டம் பெற ஆரம்பித்தபோதும் அநாவசியமாக ரன் அவுட் ஆனார். அடுத்து வந்த குசல் மெண்டிஸின் விக்கெட்டை ஷஹீன் ஷா அப்ரிடி 6 ஓட்டங்களுடன் வீழ்த்தினார்.

இந்நிலையில் எட்டு பந்துகள் இடைவெளியில் இலங்கையின் இரு அனுபவ துடுப்பாட்ட வீரர்களான அஞ்சலோ மத்தியூஸ் (9) மற்றும் திமுத் கருணாரத்னவின் (17) விக்கெட்டுகளை நசீம் ஷாவினால் வீழ்த்த முடிந்தது. இதனால் இலங்கை அணி 36 ஓட்டங்களுக்கே முதல் 4 விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இந்நிலையில் தினேஷ் சந்திமால் மற்றும் தனஞ்சய டி சில்வா இருவரும் ஐந்தாவது விக்கெட்டுக்காக 86 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டபோதும் சந்திமால் 34 ஓட்டங்களை பெற்றிருந்தபோதும் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த சதிர சமரவிக்ரம டக் அவுட் ஆகினார்.

முதல் டெஸ்டில் சோபித்த தனஞ்சய டி சில்வா 68 பந்துகளில் 57 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்ததை அடுத்து இலங்கை அணியின் வலுவான ஓட்டங்களை பெறும் எதிர்பார்ப்பு சிதறியது.

இலங்கை அணியின் பின்வரிசை விக்கெட்டுகளை சுழற்பந்து வீச்சாளர் அப்ரார் அஹமட் அடுத்தடுத்து சாய்த்தார்.

இறுதியில் இலங்கை அணி 48.4 ஓவர்களில் 166 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. அப்ரார் அஹமட் 69 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு நசீம் ஷா 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி முதல் நாள் ஆட்டநேர முடிவின்போது 28.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 145 ஓட்டங்களை பெற்றுள்ளது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அப்துல்லா ஷபீக் 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளார். ஷா மசூத் 51 ஓட்டங்களை பெற்றார்.

இலங்கை சார்பில் இரண்டு விக்கெட்டுகளையும் அசித்த பெர்னாண்டோ வீழ்த்தினார்.

இதன்படி பாகிஸ்தான் அணி இன்னும் 8 விக்கெட்டுகள் கைவசம் இருக்க 21 ஓட்டங்களாலேயே பின்தங்கியுள்ளது. இன்று போட்டியின் இரண்டாவது நாளாகும்.

# இந்தோனேசியாவில் படகு மூழ்கி 15 பேர் உயிரிழப்பு




இந்தோனேசியாவின் சுலவாசி தீவுக்கு அப்பால் படகு ஒன்று மூழ்கி 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

40 பயணிகளுடன் சென்ற இந்தப் படகு கடந்த ஞாயிறு நள்ளிரவு மூழ்கிய நிலையில் தொடர்ந்து 19 பேர் காணாமல்போயுள்ளனர். உயிருடன் மீட்கப்பட்ட ஆறு பயணிகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

17,000க்கும் அதிகமான தீவுகளுடன் உலகின் மிகப்பெரிய தீவுக்கூட்டங்களைக் கொண்ட இந்தோனேசியாவில் படகு விபத்துகள் அடிக்கடி நிகழும் ஒன்றாக உள்ளது.

சுமத்திரா தீவில் உள்ள டோபா ஏரியில் கடந்த 2018இல் படகு மூழ்கிய விபத்தில் 192 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் பாடசாலை கூரை இடிந்து 11 பேர் உயிரிழப்பு



வட கிழக்கு சீனாவில் மகளிர் கரப்பந்து அணியினால் பயன்படுத்தப்பட்டு வந்த பாடசாலை உடற்பயிற்சி கூடத்தின் கூரை இடிந்து விழுந்ததில் பதினோரு பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் என்று பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். சம்பவத்தை அடுத்து பெற்றோர்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு விரைந்துள்ளனர். வர்த்தக மாகாணமான ஹெய்லொங்ஜியாங்கில் இடம்பெற்ற விபத்தில் உடற்பயிற்சிக் கூடத்திற்குள் இருந்த 19 பேரில் எட்டு பேர் மாத்திரமே உயிர் தப்பியுள்ளனர். கூரை மீது மழைநீரை உறிஞ்சும் வகையில் வைக்கப்பட்ட பொருட்களே விபத்துக்குக் காரணம் என்று ஆரம்பக்கட்ட விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானியர் இணையவழி வாக்களிப்பது சாத்தியமில்லை



வெளிநாடுகளில் உள்ள பாகிஸ்தானியர்கள் எதிர்வரும் தேர்தல்களில் இணைய வழி (ஒன்லைன்) மூலம் வாக்களிக்க முடியாது என்று சட்ட அமைச்சர் அசம் நஸீர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சீர்திருத்தத்திற்கான பாராளுமன்ற குழுவின் அறிக்கையும் உச்ச நீதிமன்றத்தின் அறிக்கையும் வெளிநாடுகளில் உள்ள பாகிஸ்தானியர்கள் இணைய வழி ஊடாக வாக்களிப்பது சாத்தியமில்லை என்று சுட்டிக் காட்டியுள்ள போதிலும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான உரிமை அவர்களுக்கும் உள்ளது என்றும் அவர் கூறினார்.

தேர்தல் சட்டங்களில் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் குறித்து ஆராயும் கூட்டத்திற்கு பின்னர் ஊடகங்களுக்கு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

## சர்வதேச செய்திகள்

# ட்விட்டர் சின்னத்தில் மாற்றம்

ட்விட்டர் சமூகதளத்தின் புதிய சின்னமாக கறுப்பு பின்னணியில் வெள்ளை நிறத்திலான எக்ஸ் ஆங்கில எழுத்தை அந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாகி லின்டா யக்கரினோ வெளியிட்டுள்ளார். ட்விட்டரின் பறவை சின்னம் அகற்றப்படுவதாக அதன உரிமையாளர் இலொன் மஸ்க் அறிவித்துள்ள நிலையிலேயே புதிய சின்னம் வெளியிடப்பட்டுள்ளது. “இங்கே எக்ஸ் உள்ளது. அதனை செயற்படுத்துங்கள்” என்று யக்கரினோ நேற்று (24) வெளியிட்ட ட்விட்டில் குறிப்பிட்டுள்ளார். மஸ்கும் தனது ப்ரொபைல் படத்தில் புதிய சின்னத்தை பதிவிட்டுள்ளார்.

இதன்படி பயனீட்டாளர்கள் 'x.com' என்ற இணையமுகவரியைப் பயன்படுத்தினால் ட்விட்டர் தளத்திற்குச் செல்லமுடியும்.

இந்நிலையில் இந்தத் தளத்தைச் சந்தைப்படுத்தும் முறை மாற்றப்படுகிறது. ஒலி, காணொளி, செய்தி அனுப்புதல், கட்டணமுறை, வங்கிச் சேவைகள் ஆகியவற்றில் தளம் கவனம் செலுத்தும் என்று கூறப்படுகிறது. இதில் செயற்கை நுண்ணறிவு அதிகம் பயன்படுத்தப்படும்.

தளத்தை நிர்வகிக்கும் நிறுவனத்தின் பெயர் ஏற்கனவே எக்சுக்கு மாற்றப்பட்டுள்ளது.




# மகனின் இறுதிக் கிரியையில் துப்பாக்கிச் சூடு: 13 பேர் பலி



கொங்கோவில் தான் வரும் முன்னர் தனது மகனை அடக்கம் செய்ததால் கோபமடைந்த இராணுவ வீரர் ஒருவர் இறுதிக் கிரியையில் உறவினர்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் கொல்லப்பட்டனர்.

நியாகோவா என்ற கிராமத்தில் கடந்த சனிக்கிழமை (22) இடம்பெற்ற சம்பவத்தில் அந்த இராணுவ வீரரின் மனைவி, மாமியார், அவரது இரு குழந்தைகளும் கொல்லப்பட்டிருப்பதாக இராணுவ பேச்சாளர் ஜுலஸ் நிகொங்கே தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் எட்டு குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த இராணுவ வீரர் மற்றொரு கிராமத்தில் தனது சோதனைச்சாவடியில் இருந்து வீடு திரும்பியபோது தனது மகன் உயிரிழந்து அடக்கம் செய்யப்பட்டதை கண்டு கோபமடைந்தே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

# மதுபோதையில் காரை மோதிய நியூசி. நீதி அமைச்சர் விலகல்



மது போதையில் வாகனம் ஓட்டி விபத்து ஏற்படுத்திய நியூசிலாந்து நீதி அமைச்சர் கிரி அலன் இராஜினாமா செய்துள்ளார்.

கவனக்குறைவாக வாகனம் ஓட்டியது, பொலிஸ் அதிகாரிக்கு ஒத்துழைப்பு வழங்கத் தவறியது ஆகிய குற்றச்சாட்டுகளை அந்த பெண் அமைச்சர் எதிர்நோக்கியுள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபரில் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் பிரதமர் கிறிஸ் ஹிப்கின்ஸின் அமைச்சரவையில் இருந்து வெளியேறும் நான்காவது அமைச்சராக இவர் உள்ளார்.

தலைநகர் வெளிங்டனில் கடந்த ஞாயிறு (23) இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. விபத்தை அடுத்து கைது செய்யப்பட்ட கிரி நான்கு மணி நேரம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜுலை மாதம் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.